Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு
THINAMURASU

விஷானி நகை மாளிகை
மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு
இல. 187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 05 செவ்வாய்க்கிழமை (20.11.2012) பக்கங்கள் 20 ஓசை – 051.

















# அரசியல் தீர்வில் அக்கறை கூட்டமைப்புக்கு இல்லை

## சுமந்திரனின் போக்குக்கு கண்டனம்



(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னுக்குப் பின் முரண்பாடான கருத்துக்களை வெளியிடுவதாகவும் அவர்கள் தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்றவகையில் சுமூகமான அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்வதில் அக்கறையற்றவர்களாக உள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன கூட்டமைப்பு மீது கண்டனம் வெளியிட்டிருக்கிறார்.

13 ஆவது சட்டத்திருத்தம் அர்த்த மற்றது என்பதனால் நாம் அதனை நிராகரிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் (19) ஆம் பக்கம் பார்க்க

## மாநகர ஆணையாளராக மீண்டும் பிரணவநாதன்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் ஆணையாளராக நேற்று முதல் பிரணவநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த பிரணவநாதனுக்குப் பதிலாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜெயகரன் யாழ். மாநகரசபையின் ஆணையாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இவரின் இந்த இடமாற்றத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல்வேறு விதமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தபோதும், கடந்த மாதம் நடைபெற்ற மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஆணையாளர் பிரணவநாதனை மீண்டும் ஆணையாள (19) ஆம் பக்கம் பார்க்க

## காணாமல் போனவர் எலும்புக்கூடாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வரணி இயற்றாலைப் பகுதியில் உள்ள வயற்பகுதியில் பற்றை ஒன்றின் மறைவில் கடந்த சனிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக் கூடு அதே இடத்தைச் சேர்ந்த கடந்த மார்ச் மாதம் எட்டாம் திகதி காணாமல் போயிருந்த இராசன் சந்திரகுமார் (வயது-18) என்ற இளைஞருடையது என்று அவரது உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

இவர் குடும்பப் பிரச்சினை காரணமாக அன்றைய தினம் வீட்டிலிருந்து காணாமல் போயிருந்தார் எனவும், அவரது உறவினர்கள் பல பகுதிகளிலும் தேடியும் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இந்நிலையில், குறித்த பகுதியில் கடந்த சனிக்கிழமை பன்றி வேட்டைக்குச் சென்றவர்கள் இந்த மனித எலும்புக்கூட்டைக் கண்டு கொண்டதனை அடுத்து கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர். ஸ்தலத்திற்கு விரைந்த சட்ட வைத்திய (19) ஆம் பக்கம் பார்க்க

## சூடு பிடிக்கிறது பிரதம நீதியரசர் விவகாரம்

# நாடாளுமன்ற விவாதத்துக்கு தடை விதிக்குமா நீதிமன்றம்?

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையை நாடாளுமன்றில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு தடை விதிக்குமாறு கோரி மேல்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

பிரதம நீதியரசருக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையை நாடாளுமன்ற குழுநிலை விவாதத்தில் விவாதிக்க தடைவிதித்து கட்டளை பிறப்பிக்குமாறு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சந்திரா ஜயரத்ன என்பவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

மனுவின் பிரதிவாதியாக (19) ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதிக்கு ஆசி கீரிமலையில் பூசை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆசிவேண்டி நேற்று மதியம் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவி (19) ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறையுங்கள்

### அரசுக்கு சம்பந்தன் ஆலோசனை

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கு அமைச்சரவையின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் ஆலோசனை ஒன்றை முன்வைத்துள்ளார்.

அமைச்சரவையின் எண்ணிக்கையை குறைப்பதன் மூலம் மாகாணங்களுக்கான அதிகாரப (19) ஆம் பக்கம் பார்க்க

# வெலிக்கடை கைதிகள் வஞ்சம் தீர்க்கப்பட்டனரா?

## வலுவடைகிறது சந்தேகம்

(கொழும்பு)

வெலிக்கடைக் கைதிகள் பலர் வேண்டும் என்றே வஞ்சம் தீர்க்கப்பட்டனரா என்ற சந்தேகம் தற்போது சிறைச்சாலை அதிகாரிகள் மத்தியில் எழுந்துள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தின் போது பல கைதிகள் திட்டமிட்ட முறையில் படுகொலை செய்யப்பட்டதாக சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறைச்சாலையில் வன்முறை முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் கணிசமானளவு கைதிகள், சிறப்பு அதிரடிப்படையினரால், படுகொலை செய்யப்பட்டதாக சிறைச்சாலை அதிகாரிகள் சிலர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இராணுவ கொமாண்டோக்களால் கலவரம் அடக்கப்பட்ட பின்னர், சிறப்பு அதிரடிப் படையினரால் இவர்கள் கொல்லப்பட்டதாக அவர்கள் கூறியுள்ளனர்.

கலவரம் முற்றாக முடிவுக்கு வந்த பின்னர் கைதிகள் அனைவரும் சிறைக்கூண்டுகள் சென்றனர். அதன்பின்னர், சிறப்பு அதிரடிப்படையினர் பெயர்ப் பட்டியல் ஒன்றுடன் வந்து அவர்களை வெளியே வருமாறு அழைத்தனர்.

இவ்வாறு வெளியே அழைக்கப்பட்டவர்கள் 11 பேர் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டதாக அந்த அதிகாரிகள் மேலும் குறிப்பிட்டனர்.

## நல்லூரில் நடந்த சூர சங்காரம்



படம் : 02, 137

# மன்னார் மத்தியஸ்தர் சபை பிணக்குகளைத் தீர்ப்பதில் மும்முரம்

## - தலைவர் பிரின்ஸ் தெரிவிப்பு -

(மன்னார்)

ஐந்து ரூபா முத்திரைக் கட்டணத்துடன் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரு மாதத்திற்குள் மக்களுக்குத் தீர்வு பெற்றுக்கொடுத்து வருகின்றோம். மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் மத்தியஸ்தர் சபை தனது நீதிச்சேவையை மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தொடர்வதாக அதன் தலைவர் பிரின்ஸ் டயஸ் தெரிவித்துள்ளார்.

மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் இயங்க ஆரம்பித்துள்ள மன்னார் மத்தியஸ்தர் சபை, மக்களின் பல்வேறு பிரச்சினைகளையும் பிணக்குகளையும் சமாதானமாகவும் புரிந்துணர்வுடனும் தீர்த்து வைத்திருக்கின்றது.

குறிப்பாக வங்கிகளால் அறவிடப்படமுடியாத கடன்கள் மற்றும் மேலதிக பற்றுக்கள், காணித் தகராறுகள், அடிதடி போன்ற சிறு பிணக்குகளுக்கு நாம் விரைவானதும் சுமுகமானதுமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்துள்ளோம்.

ஐந்து ரூபா முத்திரைக் கட்டணத்துடன் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரு மாதத்திற்குள் மக்களுக்குத் தீர்வு பெற்றுக்கொடுத்து வருகின்றோம்.

எனவே முறைப்பாட்டாளர்கள் தங்களது பிணக்குகளுக்கு தீர்வு காண விரும்பினால் மாதத்தின் முதல் மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை முறைப்பாடுகளைப் பதிவுசெய்ய முடியும்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி வளாகத்தில் மக்கள் தங்கள் முறைப்பாடுகளைப் பதிவுசெய்ய முடியும். இறுதி ஞாயிற்றுக்கிழமை சபை கூடித் தீர்ப்பு வழங்கும் என்று அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதியின் பிறந்த தினத்தில் வேலணையில் மரம் நாட்டல்



(வேலணை)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 67 ஆவது பிறந்த தினமான நேற்று முன்தினம் வேலணைப் பிரதேசத்தில் மர நடுகை இடம்பெற்றுள்ளது.

மேற்படி நிகழ்வினை வேலணைப் பிரதேச சபையின் தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமான சி.சிவராசா (போல்) ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில் அப்பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள், வியாபார நிறுவன உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இம்மரம் நாட்டல் வேலணை வங்களாவடிச் சந்தியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜயந்தி தினத்தையொட்டி ஏழாலையில் ஊர்வலம்



(யாழ்ப்பாணம்)

விவேகானந்தரின் நூற்றி ஐம்பதாவது ஜயந்தி தினத்தையொட்டி நேற்று முன்தினம் ஏழாலை மகா வித்தியாலயத்திலிருந்து ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம் வரை விவேகானந்தரின் திருவுருவப் படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

மாணவர்கள், பொதுமக்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்ட இந்த ஊர்வலத்திற்கு பொது மக்கள் வீதிகளில் மகர தோரணங்கள் கட்டி கும்பங்கள் வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து ஏழாலை சைவமகாஜனா வித்தியாலய மண்டபத்தில் ஓய்வு பெற்ற அதிபர் செ.சிவநடராசா தலைமையில் மாநாடு இடம்பெற்றது. மாணவிகளின் நடன நிகழ்வுகள் மற்றும் சொற்பொழிவுகள் என்பனவும் இடம்பெற்றன.



நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நேற்று நடைபெற்ற சூரசங்கார நிகழ்வில் முருகனின் போர் வீரர்கள் கல்வியங்காட்டிலிருந்து புறப்பட்டு கோயிலை நோக்கிச் செல்வதைக் காணலாம். (137)

# மூக்குக்கண்ணாடி வழங்குவதாகக் கூறி ஏமாற்றும் மோசடிக் கும்பல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மிகக் குறைந்த விலையில் மூக்குக் கண்ணாடிகளை வழங்குவதாகக் கூறி ஒருதொகை முற்பணத்தினைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றும் ஒரு மோசடிக் கும்பல் செயற்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

மேற்படி தென்பகுதியைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று சமூக ஸ்தாபனங்கள், பொது இடங்களில் நடமாடும் சேவையினை நடத்தி கண்பரிசோதனை மேற்கொள்கின்றனர். பின்னர் குறைந்த செலவில் கண்ணாடிகளை வழங்குவதாகவும் அதற்கு குறித்த தொகையினை முற்பணமாகச் செலுத்துமாறும் கேட்டுப் பெற்றுக் கொள்கின்றனர்.

கண்ணாடிகளை அவர்களின் வீட்டிற்கே கொண்டு வந்து தருவதாகக் கூறுகின்றனர். இதனை நம்பி பலர் முற்பணத்தினை வழங்கி விட்டு கண்ணாடி கிடைக்கும் எனக் காத்திருக்கின்றனர். பல நாட்களாகியும் கண்ணா[illegible] கிடைக்கவில்லை.

அதுமட்டுமன்றி உடன் கண்ணாடிகளைப் பெற்றுக்கொண்ட சிலர் தமக்கு வழங்கப்பட்ட கண்ணாடி வில்லைகளின் தரம் குறித்து சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மக்களின் அறியாமையினைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபடும் இதுபோன்ற கும்பலிடம் சிக்காது இருக்க மக்களும் சமூக அமைப்புக்களும் விழிப்புடன் இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (54)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தினால் கணனி வள நிலையத்தில் நடத்தப்பட்ட கற்கைநெறிகளில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஏற்கனவே சித்தியடைந்தவர்களை இன்று கணனி வள நிலையத்தில் தமது வரவைப் பதிவுசெய்யுமாறு கணினி வள நிலைய முகாமையாளர் இ.ஸ்ரீதரன் அறிவித்துள்ளார். (109)

# கப்றுக்க சங்கத்தின் ஆதரவுடன் தென்னங்கன்றுகள் விநியோகம்

கல்வயல் கப்றுக்க சங்கத்தின் ஆதரவுடன் வீட்டுத்தோட்ட வேலைத்திட்டத்திற்கான தென்னைப் பயிர்ச்செய்கை அபிவிருத்திச் சபையினால் 500 தென்னங்கன்றுகள் இன்று வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு பயனாளிக்கும் 5 தென்னங்கன்றுகள் என்ற வீதத்தில் 100 பயனாளிகளுக்கு இவை வழங்கப்படுகின்றது. இன்று காலை 9.00 மணிக்கு கல்வயல் பொதுநோக்கு மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் சாவகச்சேரி நகரசைப எதிர்க்கட்சித் தலைவருமான சாள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகளை வழங்கி வைப்பார்.

சங்க அங்கத்தவர்களுக்கான அங்கத்துவத்தையும் வரவையும் உறுதிப்படுத்தி இத்தென்னங்கன்றுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் அ.பற்குணராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

# நிமோனியா காய்ச்சலினால் இருவர் வைத்தியசாலையில் அனுமதி

நிமோனியாக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட இருவர் கடந்த மூன்று நாட்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் தொற்றுநோய் தடுப்புப்பிரிவின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இவர்களில் ஒருவர் 13 வயதுடைய சிறுவன் எனவும் மற்றையவர் 31 வயதுடையவர் எனவும் தெரியவருகிறது. இவர்களில் 13 வயதுடைய சிறுவன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இவர்களில் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமையும் மற்றையவர் ஞாயிற்றுக்கிழமையும் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இந்த மாதம் இதுவரை 53 பேராக அதிகரித்துள்ளது. (பா)

# மண்டைதீவு பிரதான வீதி எப்போது புனரமைக்கப்படும்?

(மண்டைதீவு)

மண்டைதீவுக் கிராமதின் பிரதான வீதி மிக நீண்டகாலமாக திரத்தப்படாது மிக மோசமான நிலையில் சேதமடைந்துள்ளதால் இவ்வீதியூடான பயணங்கள் மிகச்சிரமத்தின் மத்தியில் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதி குண்டும் குழியுமாக சேதமடைந்துள்ளதால் வாகனப் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும், துவிச்சக்கர வண்டிகளும் நடைபாதையாகவும் செல்வோர் தாம் சிரமங்களுக்குள்ளாவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை அண்மையில் பெய்த மழையினால் சேதமடைந்த வீதி மேலும் சேதமடைந்துள்ளதாகவும் இதனால் வீதி விபத்துக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.

இதேவேளை ஏழு கண் பாலத்தின் நடுவில் ஓட்டை விழுந்துள்ளது. இதன் மேற்குக் கரைக் கட்டு உடைந்து கீழாக பாயும் ஓடைக் கடலில் விழுந்து இரண்டு வருடம் கடந்தும் கவனிப்பாரற்றுக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்டுகிறது.

எனவே மிகமோசமாகச் சேதமடைந்துள்ள வீதியைப் புனரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (23)

# பாவனைப் பொருட்கள் அகற்றல் தொடர்பில்லை என்கிறார் கிசோர்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி - சங்கத்தானையில் உள்ள ரதிதேவி சுப்பிரமணியம் என்பவரது வீட்டிலிருந்து வீட்டுப் பாவனைப் பொருட்கள் அகற்றப்பட்ட சம்பவத்துக்கும் தனக்கும் எந்தவிதமான நேரடித் தொடர்பும் கிடையாது என்று ஞானப்பிரகாசம் கிசோர் என்ற சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை திருட்டுச் சம்பவமாக திரிபுபடுத்திக் காட்ட சிலர் முயற்சித்ததாகவும் இது முற்றிலும் தவறாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து எமது பத்திரிகையில் நேற்று வெளியாகிய செய்தி குறித்து தெரிவிக்கையிலேயே அவர் இந்த மறுப்பை வெளியிட்டார்.

இந்த வீட்டிலிருந்து பொருட்களை அப்புறப்படுத்தியதற்கு தானே முழுப்பொறுப்பு என்று அதன் உரிமையாளரான ரதிதேவி சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப்பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது, திருமதி லோகேஸ்வரி சிவகுமார் மங்கள விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண விவசாயத்திணைக்கள திட்டப்பணிப்பாளர் எஸ்.சிவகுமாருக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எஸ்.கிருஸ்ணசிங்கம் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதனையும், மாணவிகளின் கலை நிகழ்வுகளையும் காணலாம். (01)

# உடுத்துறையில் 197 குடும்பங்கள் உதவிகள் எதுவுமின்றித் தவிப்பு

(வடமராட்சி)

உடுத்துறை கிராம அலுவலர் மக்கள் மீள் குடியமர்ந்து 2 வருடங்கள் முடிவடைந்து 3 ஆம் வருடம் ஆரம்பித்துள்ள நிலையில், இதுவரை 197 குடும்பங்கள் எந்தவிதமான வாழ்வாதார உதவிகளையும் பெறாத நிலையில் உள்ளன.

சில குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளும், மலசலகூடங்களும் வழங்கப்பட்டுள்ளன. மிகுதிப் பேருக்கு அவையும் வழங்கப்படவில்லை.

இக்குடும்பங்களும் காசுக்கான 22 நாள் வேலை செய்துள்ள நிலையில், இவர்களுக்கு அதற்கான கொடுப்பனவாக 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இக்குடும்பங்களுக்கும் வாழ்வாதார உதவியைச் செய்வதற்கு சுவிஸ் லேபக் அசிஸ்ரன் (SAH) நிறுவனம் முன்வந்துள்ள நிலையிலும், அவர்களும் இந்த உதவியை 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு பின்னர்தான் செய்வதாக தமக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், அதைவிட தற்போது அக்கிராமத்தில் வடிகாலமைப்பு வேலை செய்யவுள்ளதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் வேலை செய்வோர் 8 மணித்தியாலயங்கள் வேலை செய்ய வேண்டும் எனவும் அவர்களுக்கு அதற்கான சம்பளமாக ஒரு நாளைக்கு 700 ரூபா வழங்கப்படும் என்றும் நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனத்தால் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் வழங்கப்படவிருக்கும் உதவிகளை தற்போது வழங்கினால் தாம் வாழ்வாதார ரீதியாக முன்னேற்றம் பெறமுடியும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (38)

## துறையூர் ஐயனார் ஆலய மகரஜோதி பெருவிழா

(வேலணை)

வேலணைத் துறையூர் பூரணை புக்கலை சமேத ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த மகரஜோதி மண்டல விரத பெருவிழா கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

ஆலய பிரதம குருவான பிரம்மஸ்ரீ சி.மாதவராஜசர்மா தலைமையில் நடைபெறும் இம்மகரஜோதி மண்டல விரத பெருவிழாவானது எதிர்வரும் தைப்பொங்கல் தினம் வரை நடைபெறும்.

60 தினங்கள் நடைபெறும் இவ்விரதபெருவிழாவில் காலை 6.00 மணிக்கு நடைதிறத்தல், பஜனைப் பூசைகளுடன் பக்தர்கள் ஐயப்ப. பிரார்த்தனையும், மாலை 6.00 மணிக்கு விசேட பஜனைப் பூஜை வழிபாடு, ஆராதனை மற்றும் ஹரிஹர வாசனம் நடைசாத்துதல் என்பன தினமும் நடைபெறும் பூஜைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் பூஜைக்கு முன் நடைபெறும் பஜனையிலும் கலந்து கொண்டு ஐயன் அருள்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (138)

## சிறுவர் பரிசளிப்பு விழா

(சாவகச்சேரி)

வடமாகாணக் கல்வித்திணைக்களத்தினரின் ஆரம்பக்கல்வி பிரிவினரால் நடத்தப்படும் மாகாண மட்ட பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்விப்பணிப்பாளர் வி.செல்வராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், வடமாகாண விளையாட்டுத்துறை கல்வி மற்றும் பண்பாட்டு அமைச்சின் செயலாளர் செ.சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத்துறை கல்வி பண்பாட்டு அமைச்சின் உதவிச்செயலாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இந்நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (11)

# இந்து ஆலயங்களில் திருட்டு; அச்சத்தில் கிராமவாசிகள்

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட, அச்சுவேலி, ஆவரங்கால் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள இந்து ஆலயங்களில் அண்மைக் காலங்களில் இரவு வேளைகளில் இடம்பெற்று வரும் கொள்ளைச் சம்பவங்களால் அப்பகுதி கிராமவாசிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

கடந்த மாதத்தின் பிற்பகுதியில் அச்சுவேலி தெற்குப் பகுதியில் அமைந்துள்ள சிவசக்தி ஆலயத்தின் வெளிவாயிற் கதவினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் உட்புறக்கதவினையும் உடைத்து அங்கிருந்த ஆலயத்தின் ஒலிபெருக்கி சாதனக் கருவிகளையும், சில ஆபரணங்களையும், உண்டியலில் இருந்த பணத்தினையும், வேறு சில பெறுமதி மிக்க பொருட்களையும் களவாடிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஆலய அறங்காவலர் சபையினால் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, அச்சுவேலி பொலிஸாரினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை கடந்த வாரம் ஆவரங்கால் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கன்னாரை அம்மன் கோவிலினுள் இரவு வேளையில் உட்புகுந்த திருடர்கள் ஆலயத்தினுள் இருந்த உண்டியலினை உடைந்து அதிலிருநத பணத்தினையும், வேறு பெறுமதி மிக்க பொருட்களையும் சூறையாடிச் சென்றுள்ளனர்.

இவ்வாறாக அண்மைக் காலங்களில் இடம்பெற்று வரும முறைகேடான ஆலயத் திருட்டுச்சம்பவங்களினால், தாம் மிகவும் கலையடைந்திருப்பதாகத் தெரிவிக்கும் அப்பகுதி மக்கள், இப்படிப்பட்ட திருட்டுச் சம்பவங்கள் இனிவரும் காலங்களிலும் இடம்பெறாத வகையில் ஆலயங்களிற்கு பாதுகாப்பினை ஏற்படுத்திக் கொடுக்க சம்பந்தப்பட்ட தரப்பினரால் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்ற தமது ஆதங்கத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். (03)

# மானிப்பாய் கிராம நூலகத்தின் வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை மானிப்பாய் கிராம நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

விபரம் பின்வருமாறு,

கட்டுரை

கீழ்ப்பிரிவு

இ.ஜதுஷா (சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயம்), ர.நிதர்சனா (ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை), ஆ.நேமெலா (ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை)

கட்டுரை

மேற்பிரிவு

ம.கிருஷ்ணானந்தி (ஆனைக்கோட்டை றோமன கத்தோலிக்க த.க.பாடசாலை), சி.லக்ஷினி (யாழ்.றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை), க.ஜீவிதா (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை), கி.லூட்சாயினி (ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை)

பேச்சு

கீழ்ப்பிரிவு

அ.அனர்த்தனி (சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயம்), கு.லோஜிகா (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை), க.சாமினி (ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க த.க. பாடசாலை).

பேச்சு

மேற்பிரிவு

க.ஜீவிதா (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை), ம.சுலக்சனா (ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை), ச.ரேவதி (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை).

நிறம் தீட்டல் போட்டி

நூலக அங்கத்தவர்கள் .

சு.சஸ்மிதா (மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி), ப.வியேந்தினி ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை), சமுத்திகா ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை).

வினாவிடைப் போட்டி

அ.அபிதாஸ் (ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் த.க. பாடசாலை), சி.சஞ்சித்குமார் (ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் த.க. பாடசாலை), இ.ஜனுயா (ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் த.க. பாடசாலை). (26)

# மீனவ சங்கங்களுக்கு மானிய விலையில் படகுகள்

(வடமராட்சி)

வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி போன்ற 5 கடற்தொழிலாளர் சங்கங்களில் நல்ல முறையில் செயற்படுகின்ற 3 சங்கங்களைத் தெரிவு செய்து ஒரு சங்கத்திற்கு 10 படகும், 10 வெளியிணைப்பு இயந்திரம் வீதம் 3 சங்கங்களுக்கும் மானியமாக வழங்க சுவிஸ் லேபர் அகிஸ்ரன் (SAH) நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்தப் படகுகளையும், இயந்திரங்களையும் அந்தச் சங்கங்கள் தமது அங்கத்தவர்களில் தொழில் செய்யக்கூடிய வசதிகள் இருந்தும் படகு இல்லாதவர்களுக்கு மாதத்திற்கோ அல்லது நாளுக்கு என்ற அடிப்படையில் வாடகைக்கு வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன், அதன் மூலம் அவர்களும் சங்கமும் வளர்ச்சியடையும் என்று அந்த நிறுவனத்தின் மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுக்கான SAH நிறுவனத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் தெரிவித்தார். (38)

ஒவ்வொருவரும் உலகத்தை மாற்றநினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை. - ஆபிரகாம் லிங்கன்

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## எல்லையற்ற நேயத்தின் வழியே...

கிளிநொச்சியில் 109 தமிழ்ப் பெண்கள் இலங்கை இராணுவத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். வழக்கம்போல இந்த நிகழ்வு குறித்த செய்திக்கும் தமிழ் ஊடகங்கள் கொடுத்திருந்த வியாக்கியானம் வியப்பூட்டுவதாகவே இருந்தது. பசி, பட்டினியில் வாடும் வன்னி மக்களை இராணுவம் வளைத்துப் பிடிக்கிறது என்பது போலவே அந்தச் செய்திகள் அமைந்தன.

மனதில் வெறுப்பை மட்டுமே நிறைத்து வைத்திருப்பவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வது சிரமமல்ல. மக்கள் பசி, பட்டினியிலேயே தொடர்ந்தும் இருக்கட்டும் என்பது ஒன்று. அப்போதுதான் வெறுப்பை வளர்த்து வாக்குகளை அள்ளலாம். மற்றது சிங்கள இராணுவம் தொடர்ந்தும் தனிச் சிங்கள இராணுவமாகவே இருக்க வேண்டும். அப்போதுதான் உணர்ச்சி ஆவேசத்துடன் எதிர்த்து முழக்கமிடுவதற்கு 'கெத்'தாக இருக்கும். தமிழர்களும் கலந்துவிட்ட இராணுவமென்றால் இவர்களது வீரவசன அரசியல் கூத்தின் அடிப்படையே ஆட்டங் கண்டு விடும்.

தமிழ் மக்களுக்கு கஷ்டங்கள் தீர்ந்துவிடக் கூடாது; இராணுவத்தின் தனிச்சிங்களத் தன்மை நீங்கிவிடக் கூடாது; இன சௌஜன்யம் இங்கு ஏற்பட்டுவிடக் கூடாது; தீர்வே வந்துவிடக் கூடாது என்ற அடிமன ஆசைகளே மீண்டும் மீண்டும் இவர்களிடமிருந்து ஏதோவிதத்தில் வெளிப்பட்டு வருகிறது. எப்படி இவ்வளவு சுயநலம் நிறைந்தவர்கள் தமிழ் மக்களின் தலைவர்களாகவும் ஊடகக்காரர்களாகவும் வந்து வாய்த்தார்கள்? நம் மக்களின் எதிர்காலத்தை என்ன செய்துவிடக் கருதியிருக்கிறார்கள் இவர்கள்? இவர்களிடமிருந்து தப்பி, வன்முறைச் சுழலிலிருந்து எமது சமூகம் வெளியே வருவது எப்படி?

எண்ணினால் மலைப்பாக இருக்கிறது. அதிகார விருப்பங்களுக்காகவும், குறுகிய லாபங்களுக்காகவும் மக்கள் மனங்களில் திரும்பத் திரும்ப ஊட்டப்படும் இந்த இனவாதமும் வெறுப்பும் விரோதமுமான நஞ்சு மீண்டும் எங்கு கொண்டுபோய் விடும்? நடந்து முடிந்த அவல வரலாற்றையே மீண்டும் நடத்த முற்படுவதைத் தானா நமது அறிவுச்சமூகத்தினரும், வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்?

தேசத்தை உருவாக்குவதற்கான தேசியவாதத்தை முன்னெடுப்பவர்கள் மற்றவர்கள் மீதான வெறுப்பைக் கட்டியெழுப்புவதனூடாகவே தேசியத்துக்கான ஒருங்கிணைவைச் சாதிக்கின்றனர். வெறுப்பு மூட்டும் ஆவேசப் பேச்சுக்களால் ஒருங்கிணைக்கப்பட்ட அந்த மக்களைக் கொந்தளிக்க வைத்தபடி இருக்கிறார்கள். அவர்களது அரசியல் லாபத்திற்கு இவ்வாறு தீவிர உணர்ச்சியால் திரளாக்கப்படும் மக்கள் தேவை.

மற்றவற்றை மறுப்பதன் மூலமும் வெறுப்பதன் மூலமுமே இந்த ஒருங்கிணைவு உண்டாக்கப்படுகிறது. நம்முடைய இன, மொழி, தேசிய உணர்வுகளைக் கூர்தீட்டி விடும் பேச்சுக்களிலிருந்தே பிறவற்றின் மீதான மறுப்பும் வன்முறை உணர்வும் வளர்த்து விடப்படுகிறது. இந்த எல்லைக்கோடுகளை நமக்குள் போட்டு வைத்துக்கொண்டு அதனுள்ளேயே இருப்பதன் மூலம் நாம் பாதுகாப்புடன் இருப்பதாக உணர்கிறோம்.

ஆனால் உண்மையில் இந்தப் புனித எல்லைக்கோடுகள் யாவும் மனிதகுலத்துக்குத் தீங்கு விளைவிப்பவையாகவே உள்ளன என்றும் நாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புரிந்து கொண்டே வருகிறோம். இருந்தாலும் நம்மை மாற்றிக்கொள்ள எண்ணுவதில்லை அல்லது இந்த சுயநலவாதிகள் விடுவதில்லை.

சமூகமும் இந்தத் தலைவர்கள் எனப்படுவோரும் நம் மூளையில் திணிக்கின்ற அனைத்து விஷயங்களைப் பற்றியும் நாம் வேறோர் கோணத்திலிருந்து பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. தமிழர்கள் என்ற அடையாளத்தை நாம் எல்லையற்ற நேயத்தின் வழியேதான் அடைய முடியுமே அல்லாமல், இரத்தக் களரியினாலும் வெறுப்பினாலும் அல்ல.

- ஆசிரியர்

# இருப்பதைவிட அதிக அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்குவதே சிறந்தது

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன

(கொழும்பு)

மாகாண சபைகளின் அதிகாரங்களை இல்லாது செய்து விட்டு வடமாகாணசபைத் தேர்தலை நடத்துவது நியாயமற்றது. அரசு மாகாணசபைகளின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கே நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக அவற்றின் அதிகாரங்களை ஒருபோதும் இல்லாதொழிக்கவோ, குறைக்கவோ முயற்சிக்கக் கூடாது. இவ்வாறு அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டைப் பாதுகாக்கும் இயக்கத்தின் பிரதிநிதியும், நவசம சமாஜக் கட்சித் தலைவருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்குத் தவிர்ந்த ஏனைய எட்டு மாகாண சபைகளின் தேர்தல்களை அரசு நடத்திய போது, 13ஆவது திருத்தத்திலுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்குவது பற்றி ஆளும் தரப்பு வாய்திறக்கவில்லை.

ஆனால் இப்போது வடமாகாண சபைத் தேர்தல் வரும் போது தான் 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும். அந்தத் திருத்தத்தின் முக்கிய அம்சங்களான காணி, பொலிஸ் அதிகாரங்கள் அதிலிருந்து நீக்கப்படவேண்டும் என்ற கோஷங்கள் எழுகின்றன. வடமாகாணசபைத் தேர்தல் அடுத்த வருடத்தில் நடத்தப்படும் என்று அறிவித்துவிட்டு மாகாண சபைகளுக்குரிய காணி, பொலிஸ் அதிகாரங்களை இல்லாதொழிப்போம் என்று அரசு கூறுவது நியாயமற்றது. இந்த அதிகாரங்களை இல்லாதொழித்துவிட்டு வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதிலும் எவ்வித பயனும் இல்லை.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு உரிய தீர்வை அரசு வழங்கவேண்டும். அதற்காக மாகாணசபைகளுக்குத் தற்போது இருப்பதை விடவும் அதிகமான அதிகாரங்களை வழங்க வேண்டுமே தவிர, அவற்றைக் குறைக்கவோ அல்லது இல்லாதொழிக்கவோ கூடாது. அவ்வாறானதொரு நடவடிக்கையில் அரசு ஈடுபடுமாயின், அதனை நாம் கடுமையாக எதிர்ப்போம். அத்துடன், அது நாட்டில் ஓர் அபாயகரமான நிலையைத் தோற்றுவிக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்றார்.

# ஒவ்வாமையால் பாதிக்கப்பட்டோரின் இரத்தமாதிரிகள் பரிசோதனைக்கு

(கொழும்பு)

கடந்த வாரத்தில் மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் பல பிரதேசங்களில் பாடசாலை மாணவர்கள் அசாதாரண உபாதைகளுக்கு உள்ளானமை தொடர்பில் செய்திகள் வெளியாகியிருந்தன. முதலாவதாக கம்பளை ஜினராஜ வித்தியாலயத்தில் ஆயிரம் மாணவிகள் ஒவ்வாமை காரணமாக பல்வேறு உபாதைகளுக்கு உள்ளாகினர். பின்னர், கம்பளை பன்னிலதென்ன பாடசாலையிலும் 40 மாணவர்கள் பாதிக்கப்பட்டனர்.

இதுதவிர, பலங்கொட வெலிகேபொலவிலுள்ள ஆரம்ப நிலை பாடசாலையின் 87 மாணவர்கள் மற்றும் கண்டி நுகவெல ஆண்கள் பாடசாலையின் 200 மாணவர்களும் ஒவ்வாமை நிலைக்கு முகம்கொடுத்திருந்தனர்.

இது தொடர்பாக மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சாந்தி சமரசிங்க தெரிவிக்கையில், பாதிக்கப்பட்ட மாணவ, மாணவிகளின் இரத்த மாதிரிகள் மருத்துவ பரிசோதனைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அதேவேளை, மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள அறிகுறிகளுக்கு அமைய மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

## சொத்து விபரங்களை அரசியல்வாதிகள் வழங்கவில்லை

(கொழும்பு)

சொத்துக்கள், பொறுப்புக்கள் குறித்து தேர்தல்கள் ஆணையாளருக்கு தகவல் வழங்குவதில் அரசியல்வாதிகள் முறையாகச் செயற்படவில்லை என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

யூன் மாதத்திற்கு முன்னர் சொத்துக்கள், பொறுப்புக்கள் குறித்த விபரங்கள் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோகண கெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

சொத்துக்கள், பொறுப்புக்கள் குறித்த தகவல் வழங்காத அரசியல்வாதிகள் குறித்து பொது மக்களுக்கு தெளிவுபடுத்துமாறு பவ்ரல் அமைப்பு தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தரம்குறைந்த மருந்துகள் கடந்த வருடம் கொள்வனவு

(கொழும்பு)

கடந்த வருடம் பல்வேறு நோய் நிவாரணங்களுக்காக 971 மில்லியன் ரூபாய்களுக்கு மருந்துப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் அவை தரத்தில் குறைவானவை என கண்டறியப்பட்டுள்ளன.

எனினும். பல வகையான மருந்துகள் நோயாளர்களுக்கு சிகிச்சைக்காக வழங்கப்பட்டிருந்ததாக கணக்காய்வாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ விநியோக பிரிவில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாக திறந்த சந்தையில் 4.1 பில்லியன் ரூபாய்களுக்கு மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டன.

எனினும், தரம்குறைந்த மருந்துக் கொள்வனவினால் 1.4 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்போது எந்த அளவிலான நோயாளர்கள் மருந்துகளை பயன்படுத்தினார்கள் என்ற விபரம் கண்டறியப்படவில்லை.


# இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நேர்மையாகவே நடைபெற்றது

கூறுகின்றார் குணதாச அமரசேகர

(கொழும்பு)

இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்காக செயற்படவில்லை என்பது உண்மையாகும். ஆனால் உள்நாட்டு யுத்தம் நேர்மையாகவே நடைபெற்றது. எனவே ஐக்கிய நாடுகள் சபையின் உள்வீட்டுப் பிரச்சினைகளை பயன்படுத்தி இலங்கைக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுப்பது முறையற்றதாகும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது. நாட்டிற்கு எதிராக ஐ.நா.வும் மேற்குலக சக்திகளும் செயற்படும் வகையில் கையை கட்டி, வாயை மூடிக்கொண்டு தொடர்ந்தும் இருக்காமல் அரசாங்கம் புத்திசாலித்தனமாக சவால்களை எதிர்கொள்ள வேண்டும். சர்வதேசத்தின் மனித உரிமை குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்றும் அவ் இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர கூறுகையில், போர்க் குற்ற விசாரணையில் இலங்கையை அடிபணிய வைக்க சர்வதேச நாடுகள் பல்வேறு வகையில் முயற்சிகளை மேற்கொண்டன. தற்போதும் அந்த முயற்சிகள் தொடங்குகின்றன. ஐக்கிய நாடுகள் சபை உள்நாட்டு யுத்தத்தின்போது முறையாக செயற்படவில்லை எனக் கூறி இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி தருணங்கள் தொடர்பில் புதிதாக அறிக்கையை தயாரிக்கும் முயற்சியில் சர்வதேச சதிகாரர்கள் இறங்கியுள்ளனர். இவர்களை அடையாளம் கண்டு கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். குறிப்பாக இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளை நம்பாது சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுடன் ஒன்றிணைந்து நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி சர்வதேச சவால்களை முறியடிக்க வேண்டும் என்றார்.



# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 7

**வே.அர்ச்சுணன்**

> **“தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முதன்முதலாக தோற்றுவிக்கப்பட்டு, அதில் வெற்றிபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை வன்னிப் பகுதிக்கு அழைத்துச் சந்தித்த தமிழ்ச்செல்வன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரிடம் “உங்களது பிரசார நடவடிக்கைகளிற்காகவும் பிற தேவைகளிற்காகவும் நாங்கள் குறிப்பாக தலைவர் ஒரு சிறிய உதவியை செய்ய என்னிடம் பணித்துள்ளார். அதாவது உங்கள் ஒவ்வொருவரிற்கும் பதினைந்து இலட்சம் ரூபா வீதம் தலைவர் கொடுக்கச் சொல்லியிருக்கிறார். இதில் ஐந்து இலட்சம் ரூபா உங்களது 6மாத ஊடகப் பரப்புரைக்காக தலைவர் ஒதுக்கியிருக்கிறார்” எனக் கூறி இந்த நிதியை வழங்கிய பொழுது கூட்டமைப்பிலிருந்த அனைவரும் முண்டியடித்துக் கொண்டு இந்த நிதியைப் பெற்றது அனைத்து ஊடகவியலாளர்களும் அறிந்த ஒரு விடயமாகும்.**

விடுதலைப்புலிகள் இயக்கம் ஊடகத்துறையில் பலமுடன் இருந்துவந்ததை எவருமே மறுக்கமுடியாது. நெருக்கடியான காலகட்டங்களிலும், விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவு சுறுசுறுப்பாகவே செயற்பட்டு வந்தது. விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டில் பல ஊடகங்களை நேரடியாக நெறிப்படுத்தி வந்த போதிலும், பிற தனியார் ஊடகங்களையும் தமது கொள்கைக்கேற்ற விதத்தில் வளைத்து வைத்திருந்தனர். இவ்வாறு தமது கொள்கைகளுக்கு இயைபாக செயற்பட்டு வந்த ஊடகங்களிற்கு பல்வேறு சலுகைகளையும் வழங்கி வந்தனர்.

விடுதலைப்புலிகள் தமது பிரசார நடவடிக்கைகளுக்காக பணத்தினை வாரிவாரி இறைத்து வந்தனர். இதற்குரிய நிதி வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர்ந்த தமிழர்களிடத்திலும், உள்ளூரில் வரி அறவீடுகளின் மூலமும் அவர்களால் பெறமுடிந்தது. இந்தப் பிரசார ஊடக யுத்தத்தில் விடுதலைப்புலிகள் பெரியளவில் சாதித்தபோதிலும், சில ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்கள் விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்குடன் துரோகத் தனத்துடன் செயற்பட்டு வந்ததை விடுதலைப்புலிகள் அறியாமல் இருந்ததுதான் அவர்களின் அழிவிற்கும் ஒருவிதத்தில் வழிகோலியது.

விடுதலைப்புலிகள் தமது பிரசார நடவடிக்கைகளிற்காக பணத்தினைத் தண்ணீர்போல் செலவிட்டதை சிறிய ஒரு உதாரணத்தின் மூலம் நாங்கள் விளங்கிக் கொள்ள முடியும். அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதன்முதலாக தோற்றுவிக்கப்பட்டு அதில் வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை விடுதலைப்புலிகள் வன்னிப் பகுதியில் சந்திப்பதற்கான ஏற்பாடு ஒன்று செய்யப்பட்டிருந்தது. இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்த தமிழ்ச்செல்வன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரிடம் “உங்களது பிரசார நடவடிக்கைகளிற்காகவும் பிற தேவைகளிற்காகவும் நாங்கள் குறிப்பாக தலைவர் ஒரு சிறிய உதவியை செய்ய என்னிடம் பணித்துள்ளார். அதாவது உங்கள் ஒவ்வொருவரிற்கும் பதினைந்து இலட்சம் ரூபா வீதம் தலைவர் கொடுக்கச் சொல்லியிருக்கிறார். இதில் ஐந்து இலட்சம் ரூபா உங்களது 6 மாத ஊடகப் பரப்புரைக்காக தலைவர் ஒதுக்கியிருக்கிறார்” எனக்கூறி இந்த நிதியை வழங்கிய பொழுது கூட்டமைப்பிலிருந்த அனைவரும் முண்டியடித்துக்கொண்டு இந்த நிதியைப் பெற்றது அனைத்து ஊடகவியலாளர்களும் அறிந்த ஒரு விடயமாகும்.

ஆனால் மறைந்த பாராளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், சிவனேசன் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த நிதியை புலிகளிடமிருந்து பெற மறுத்ததுடன், இந்த நிதியை நீங்கள் வறிய குடும்பங்களிற்கு கொடுத்து உதவுங்கள் எனக் கூறிவிட்டு வந்துவிட்டனர். ஆனால் இவர்களது முன்மாதிரியான நடவடிக்கையை நேரடியாக கண்டிருந்த மாவை சேனாதிராஜா, பத்மினி சிதம்பரநாதன், ஈழவேந்தன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு சிறிய சலனமுமின்றி இந்த நிதியை வாங்கியதுடன் மட்டும் நிற்காமல், பின்னர் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தைவிட்டு சென்றதன் பின்னர் தனது வாகனத்திற்கு பெற்றோல் அடித்துவிடுங்கள் என ஈழவேந்தன் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் அசடுவழிய நின்றபோது புலிகள் புன்முறுவலுடன் அவருக்கு டீசலும் அடித்துவிட்டு மேலதிகமாக 10ஆயிரம் ரூபாவையும் “பெற்றோல் அடியுங்கள்” என கொடுத்தமையானது அந்த நாட்களில் வன்னிப் பகுதியில் சுவாரசியமாகப் பேசப்பட்ட செய்திகளில் ஒன்று. ஈழவேந்தனைக் கண்டவுடன் புலிகள் “பெற்றோல் மாமா வருகிறார்” என கிண்டலடிப்பதும் வழக்கமாக இருந்தது.

உண்மையில் மக்கள் சேவைக்கெனப் புறப்பட்ட இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் புலிகளிடம் பணம் பெற்ற விடயத்தை எந்தவொரு ஊடகமும் அன்றைய நாட்களில் வெளிச்சத்திற்கு கொண்டுவரவில்லை. எத்தனையோ குடும்பங்கள் போராட்டத்தில் ஈடுபட்டு தமது உறவுகளை வன்னியிலே தொலைத்துவிட்டு வறுமையில் வாடியபொழுது, உல்லாசமாக குளிரூட்டப்பட்ட வாகனத்தில் சுற்றுலா சென்றவாறு புலிகளிடமும் கூட்டமைப்பினர் பணம் கறப்பதில் குறியாகவே இருந்து செயற்பட்டனர். இந்த விடயத்தை தமிழ் ஊடகங்கள் முழுமையாக மூடிமறைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டமையானது தமிழ்மக்களிற்கு தமிழ் ஊடகங்கள் இழைத்த அநீதிகளுள் ஒன்றாகவே பார்க்கப்பட வேண்டியது. ஏனெனில் மக்களிடம் சேகரித்த நிதியை வைத்தே புலிகள் இவர்களுக்கு பணம் கொடுத்தனர். இந்தப் பணத்தை ஒன்றில் புலிகள் தமது படையியல் தேவைகளிற்கு பயன்படுத்தியிருந்தால் ஒரு போராட்ட இயக்கம் மக்களிடம் நிதிசேகரித்து போராடுகிறது என ஓரளவிற்கு நியாயப்படுத்தியிருக்க முடியும். அல்லது அந்த நிதியை தமது அமைப்பிலிருந்து அல்லது யுத்தத்தில் கடுமையாக பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு பகிர்ந்தளித்திருந்தால் அது பயனுள்ளதாக இருந்திருக்கும்.

ஆனால் உருப்படியான எதையுமே செய்யாமல் தமது பிள்ளைகளை இந்தியாவிலும் ஏனைய பிறநாடுகளிலும் கல்விகற்க அனுப்பிவிட்டு இங்கு வீர வசனங்களைப் பேசியவாறு மக்களை மட்டுமல்லாது புலிகளையும் ஏமாற்றியவாறு அரசியல் செய்தவர்களிற்கு வழங்கிய நிதியானது உண்மையில் ஒரு மக்கள்விரோத நடவடிக்கையாகவே பார்க்கப்பட வேண்டியது. இதை தமிழ் ஊடகங்கள் மூடிமறைத்தமையானது மிகவும் வருத்தத்திற்குரிய ஒரு விடயமாகும்.


தமிழ் ஊடகத்துறை வரலாற்றில் அவர்கள் குறிப்பாக ஒரு நிலையான கொள்கையை வகுத்து செயற்படுவதை தவிர்த்தே வந்தனர். குறிப்பாக பக்கம் சாரும் போக்கையே கடைப்பிடித்து வருகின்றனர். விடுதலைப் புலிகளை அழிப்பதில் ஏதோ ஒரு வகையில் பங்காற்றிய தமிழ் ஊடகங்கள் தொடர்பில் புலிகள் இறுதிக்கட்டத்தில் அதிருப்தியடைந்தே காணப்பட்டனர். வன்னியில் விடுதலைப்புலிகளால் நடத்தப்படுகின்ற ஒவ்வொரு வெளிநாட்டு தூதுவர்களுடனான சந்திப்புக்கள் மற்றும் பிற முக்கிய சந்திப்புகள் என்பனவற்றில் ஊடகவியலாளர்கள் கலந்து கொள்கின்ற சந்தர்ப்பங்களில் இவர்களுக்கு புலிகள் பல்வேறு சலுகைகளை வழங்குவதுடன், இவர்களை தமது கண்காணிப்பிலும் வைத்திருக்கத் தவறுவதில்லை. குறிப்பாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, கொழும்பு போன்ற பகுதிகளிலிருந்து வரும் ஊடகவியலாளர்களை மேலோட்டமாக பொட்டம்மானின் ஆட்கள் அவதானித்தவாறே இருந்துகொள்வர். இதைவிட ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் வருகின்ற ஊடகவியலாளர்களில் பொட்டம்மானின் நம்பிக்கைக்குரிய ஊடகவியலாளர்களும் ஏனைய ஊடகவியலாளர்களுடன் இரண்டறக்கலந்து சந்திப்புக்களில் கலந்து கொள்வர். சந்திப்புக்கள் முடிந்த பின்னர் விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவில் ஊடகங்களை கையாளுகின்ற பிரதீப் மாஸ்ரர் என்பவரை இவர்கள் சந்திக்கத் தவறுவதில்லை. இவ்வாறு சந்திக்கின்ற பொழுது ஏனைய ஊடகவியலாளர்களின் மனநிலை அவர்களுடைய போக்குகள் என்பன தொடர்பில் இவர்கள் புலிகளிற்கு தகவல்களை வழங்கத் தவறுவதில்லை.

குறிப்பாக வவுனியாவிலிருந்து செயற்பட்டு வந்த மாணிக்கவாசகம் என்ற ஊடகவியலாளர் தொடர்பில் புலிகளிற்கு அடிக்கடி சந்தேகங்கள் எழுவதுண்டு. இவர் தொடர்பில் புலிகளிற்கு மறைந்த நிமல்ராஜனும், வித்தியாதரனும் அடிக்கடி கோள் சொல்லிவந்தனர். நிமலராஜன் மறைந்ததன் பின்னர் வித்தியாதரன் தொடர்ச்சியாக போட்டுக்கொடுத்து வந்தார். இருந்த போதிலும் மாணிக்கவாசகம் வெட்டி ஓடக் கற்றுக்கொண்டதால், புலிகளையே வெட்டி ஓடியதுடன் புலிகளின் அரசியல் துறையை தனதுகைக்குள் போட்டுக்கொண்டு காரியத்தை சாதித்து வந்தார். குறிப்பாக வன்னிப் பகுதிக்கு தான் வர முடியாத சூழ்நிலைகளில் அரசியல் துறை ஊடாகத் தகவல்களை உடனுக்குடன் பெற்றுவந்தார். சில நேரங்களில் இவர் வன்னிக்கு வந்தாலும் விடுதலைப்புலிகளின் விருந்துபசாரங்களில் இவர் கலந்து கொள்வதற்கு அழைக்கப்படுவதில்லை.

விடுதலைப்புலிகளின் விருந்துபசாரங்கள் என்பது சாதாரணமானதல்ல. அதாவது விசேட விருந்துகள் ஏற்பாடு செய்யப்படுகின்ற பொழுது வான்கோழி முக்கிய உணவாக இருக்கும். இந்த வான்கோழியின் அதிசயங்கள், இவற்றை உண்ட ஊடகவியலாளர்கள் புலிகளை எவ்வாறு உண்ட வீட்டுக்கு இரண்டகமாக அழித்து முடித்தார்கள் என்பது தொடர்பில் தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

# முஸ்லிம் தனியார் திருத்தச் சட்டமூலம் விரைவில் அமுல்படுத்தப்படும்



(கொழும்பு)

முஸ்லிம் தனியார் திருத்தச் சட்டமூலம் விரைவில் அமுல்படுத்தப்படும் என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஸர்மிளா ஸெய்யத்தின் 'சிறகு முளைத்த பெண்' எனும் கவிதை நூல் அறிமுக விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். எனினும் இந்தத் திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவதற்கான பூரண அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளது.

எமது மூதாதையர்களினால் இந்தச் சட்டம் பல தசாப்தங்களுக்கு முன்னர் எமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது எமக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதாமாகும்.

எனினும் இந்தச் சட்டமூலத்தில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. இதனை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் மாற்றி அமைக்க வேண்டிய தேவை உள்ளது.

எனவே இந்தச்சட்டத்தில் மேற்கொள்ள வேண்டி திருத்தங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு உயர நீதிமன்ற நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஊழல்களுக்கு விரைவில் பதில் கிடைக்கும்



(கொழும்பு)

ஊழல் மோசடிகளை மேற்கொண்டு, மக்களின் சொத்துக்களை சூறையாடி குடிசைகளை மாளிகைகளாக நிர்மாணித்துக் கொண்டவர்களுக்கு விரைவில் பதில் கிடைக்கும் என்று பொது மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார். ஜனாதிபதியின் 67ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இரு பாலங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள் அமைச்சர் மேர்வின் சில்வா தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிலர் ஆணி அடித்தாற்போல பதவிகளில் ஒட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அப்பதவிகளிலிருந்து போகா விட்டால் அவர்களை நாம் போக வைக்க வேண்டும் என்றும் அமைச்சர் மேர்வின் மேலும் குறிப்பிட்டார்.

## நீதிமன்ற அழுத்தத்தை எதிர்க்க மக்களை அணி திரட்டுவோம்

(கொழும்பு)

சிலர் பேச்சு சுதந்திரத்தை முடக்குவதற்கு முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பல்வேறு சட்டங்கள், நியதிகள் மற்றும் சுற்று நிருபங்களின். மூலம் பேச்சுச் சுதந்திரத்தை முடக்க முயற்சிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டமைப்பின் மீது பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் மீதான அழுத்தங்கள் தொடர்பில் சுதந்திரமாக கருத்து வெளியிடுவதனை சிலர் முடக்க முயற்சிக்கின்றனர்.



நாட்டின் அனைத்து மக்களினதும் கருத்துச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதற்கு தடைகள் கிடையாது.

நீதிமன்றக் கட்டமைப்பின் மீதான அழுத்தங்களை எதிர்க்க மக்களை அணி திரட்டிப் போராடப்போவதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஹெரோயின் விற்ற தாயும் மகனும் கைது




(கொழும்பு)

மோதர பிரதேச சுற்றி வளைப்பின் போது ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டிருந்த தாய் மற்றும் மகன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோதர, சமித்புர, மட்டக்குளிய பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட இளைஞரிடமிருந்து 18 கிராம் 700 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை கைது செய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து ஆறு கிராம் 600 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இருவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## போலி கடனட்டை மோசடி; வெளிநாட்டவர்களுக்கு விளக்கமறியல்



கடனட்டை மோசடியில் கைது செய்யப்பட்ட ஐந்து வெளிநாட்டவர்களும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போலி கடனட்டைகளைப் பயன்படுத்தி நிதி மோசடியில் ஈடுபட்ட ஐந்து வெளிநாட்டு பிரஜைகள் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் வெள்ளவத்தைப் பகுதியில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித துள்ளனர்.

இவர்கள் போலி கடனட்டைகளைப் பயன்படுத்தி வெளிநாட்டவர்களின் வங்கி கணக்குகளிலுள்ள பணத்தைப் பெற்று கொண்டுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சந்தேகநபர்களிடமிருந்து 250 போலி கடனட்டைகளும் 25 இலட்ச ரூபா பணமும் ஐயாயிரம் யூரோக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## எதிரணிக்கு ஆலோசனை வழங்க சட்டத்தரணிகள் குழு நியமனம்



(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெற்றுள்ள எதிரணி உறுப்பினர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக சட்டத்தரணிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சி தலைவர் காரியாலயம் அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரமே சட்டத்தரணிகள் குழு நியமிக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு எதிர்வரும் 23 ஆம் திகதி சமுகமளிக்குமாறு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில், அந்த திகதிக்கு முன்னர் சட்டத்தரணிகள் குழு நியமிக்கப்படும் என்றும் எதிர்க்கட்சி தலைவர் காரியாலயம் அறிவித்துள்ளது.

## நுகர்வோர் சட்டத்தை மீறிய 35 ஆயிரம் வர்த்தக நிலையங்கள்

ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் நுகர்வோர் சட்டங்களை மீறிய 35 ஆயிரம் வர்த்தக நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அவ்வாறான வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார். அவர்களிடமிருந்து 77 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான அபராதம் அறவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சடலமாக மீட்கப்பட்ட கப்பல் நிறுவன பணிப்பாளர்

கொழும்பு-பம்பலப்பிட்டி, மெராயன் டிரைவ் வீதியில் அநாதரவாக நின்ற கார் ஒன்றில் இருந்து ஆணொருவரின் சடலம் நேற்று முன்தினம் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலத்தில் வெட்டுக்காயங்கள் இருந்ததாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சடலம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள இரண்டு பொலிஸ் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கொலை எனச் சந்தேகிக்கப்படும் சம்பவத்தில் மரணமானவர், கிருலப்பனை- பொலஹேன்கொட பகுதியைச் சேர்ந்த 45 வயதான மெரிஞ்ஞகே விஜித் டி கொஸ்தா என அடையாளம் காணப்பட்டார்.

மரணித்தவர் கப்பல் நிறுவனம் ஒன்றின் முகாமைத்துவப் பணிப்பாளர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்தநிலையில் சடலம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் நடத்தி வருகின்றனர்.

## சட்டவிரோத மீன்பிடி; இலங்கை மீது குற்றச்சாட்டு



இலங்கை சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக ஐரோப்பிய ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கை உள்ளிட்ட எட்டு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுக்கத் தவறினால் தடைகள் விதிக்க நேரிடும் என ஐரோப்பிய ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை, கம்போடியா, பிஜித்தீவுகள், கய்னா, பனாமா, டொகோ மற்றும் வனுவாட்டு மற்றும் பெலிஸீ ஆகிய நாடுகளில் இவ்வாறு சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தற்போதைக்கு தடைகள் விதிக்கப்பட மாட்டாது எனவும், ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளத் தவறினால் எதிர் காலத்தில் ஐரோப்பிய நாடுகள், குறித்த நாடுகளுக்கு மீன்பிடி உபகரணங்களை விற்பனை செய்யாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நாடுகளை கறுப்புப் பட்டியல் இடவில்லை எனவும், எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் ஐரோப்பிய ஆணைக் குழுவின் கடல்வள விவகார ஆணையாளர் மாரியா டமான் கனி தெரிவித்துள்ளார்.





ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 67ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நாட்டின் பல இடங்களில் பல்வேறு வைபவங்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

# அழிவிலிருந்து மீண்டெழுவதற்கு மக்களிடம் உத்வேகம் வேண்டும்



மிகப்பெரும் அழிவுகளை சந்தித்த எமது மக்கள் இன்று மீண்டெழவேண்டும் என்ற புதிய உத்வேகத்துடன் செயற்படுகின்றார்கள் என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் மாவட்ட கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தின் கட்டடத்தினை திறந்தவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம் மண்ணிலே கொடிய யுத்தத்தின் காரணமாக அழிந்து போன கலை கலாசார விழுமியங்கள் இன்று மீளவும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இங்கு அரங்கேற்றப்பட்ட கலை நிகழ்வுகள் அதற்குச் சான்று பகர்கின்றன. அத்தோடு வன்னி மண்ணின் கலைப் பெருமையை தென் பகுதி மக்களும் கண்டு வியக்கும் அளவுக்கு எமது மாணவர்களின் கலைத்திறன் மேம்பட்டு நிற்கின்றது. அதற்கு உந்து சக்தியாக திகழும் ஆசிரியர்களும் மாணவர்களும் போற்றுதற்குரியவர்கள்.

எங்கெல்லாம் மக்கள் அழிவுகளையும் இழப்புகளையும் சந்திக்கின்றார்களோ அங்கெல்லாம் ஆக்கத்தை நோக்கிய உந்து சக்தி மக்களிடையே பன்மடங்கு மேலோங்கிக்காணப்படும். அந்த வகையில் மிகப்பெரும் அழிவுகளை சந்தித்த எமது மக்களும் மீண்டெழவேண்டும் என்ற புதிய உத்வேகத்துடன் செயற்படுகின்றார்கள். அதன் வெளிப்பாடுகள் இன்று கண்கூடே தென்படுகின்றன. அந்த உத்வேகமும் மனோதிடமும் எம்மக்களிடயே நிலைத்திருக்கும்வரை அழிந்து போன அனைத்து வளங்களையும் விரைவாக மீளப்பெறமுடியும்.

அத்தோடு கிளிநொச்சி மாவட்டத்தின் கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் அதுசார்ந்த கல்வியை வளர்ப்பதற்கும் ஏற்ற கலாசார மண்டபம் அமைக்கப்படவேண்டும் எனவும் மாவட்டத்திற்கும் பிரதேச செயலர் ரீதியாகவும் அவை அமையப் பெற வேண்டும் எனவும் அதற்கான செயற்பாடுகள் அடுத்து வரும் ஆண்டில் முன்னெடுக்கப்படும் என்றார்.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேசசெயலர் நாகேஸ்வரன், லிட்டில்எய்ட் நிறுவனத்தின் பணிப்பாளர் கொன்சன்ரைஸ், நிறுவனத்தின் இணைப்பாளர் நிமல்காரியவசம், மீள்எழுச்சித் திட்ட பிரதித்திட்டப்பணிப்பாளர் விஜயகிருஸ்ணன், கரைச்சி பிரதேசசபையின் உறுப்பினர்களான கிருஸ்ணசாமி இராமச்சந்திரன், சபாநாயகம் ஆகியோரும் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் முருகவேல், ஈபிடிபியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் உள்ளிட்ட பலரும கலந்து கொண்டனர்.

# பயிற்சிச் செயலமர்வு

'யாவருக்கும் விஞ்ஞானம்' என்னும் தொனிப்பொருளில் இயற்கை வலிமையினூடாக ஒருமைப்பாடு என்னும் செயற்றிட்டத்தை இயற்கை வலுவூட்டல் கழகம் ஊடாக நடைமுறைப்படுத்தி வரும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம், இலங்கை களப்பறவையியல் குழு கொழும்புப் பல்கலைக்கழகம், சிறுவர் மகிழ்வகம் ஆகியன இணைந்து என்.ஏ.சி கழக உறுப்பினர்களாக செயற்பட்டு வரும் பாடசாலை ஆசிரியர்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை ஒருநாள் பயிற்சிச் செயலமர்வு நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் கொழும்பு பல்கலைக்கழக விலங்கியல்துறைப் பேராசிரியரும் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத் தலைவருமான பேராசிரியர் சரத் கொட்டகம வளவாளராக கலந்து கொண்டு பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆசிரியர்களுடன் கலந்துரையாட இருப்பதனால், ஒவ்வொரு பாடசாலையிலும் இக்கழகத்தை தற்போது நடைமுறைப் படுத்திக்கொண்டிருக்கும் இரண்டு ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (03)

# கிணற்றில் விழுந்த திருடன் வசமாக மாட்டிக் கொண்டான்

(கொக்குவில்)

கொக்குவில் தலையாழிப்பகுதியில் திருடுவதற்காகச் சென்ற திருடன் ஒருவன் கிணற்றுக்குள் விழுந்ததால் இராணுவத்தினரிடம் அகப்பட்டுப் கொண்டான். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த சனிக்கிழமை இரவு 12 மணியளவில் தலையாழிப் பகுதியில் திருட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மேற்படி திருடன் கிணறறுக்குள் இருந்து கூக்குரல் இட்டதனையடுத்து, அப்பகுதிக்கு விரைந்த இராணுவத்தினர் அவனைக் காப்பாற்றி விசாரித்தபோது அவன் திருடன் என்பது அடையாளம் காணப்பட்டதையடுத்து அவனை யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவன் பல திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனவும், பலமுறை சிறைச்சாலையில் தண்டனைக்கு ஆளாகியவர் எனவும் தெரியவருகிறது. (53)

# மண்டைதீவுக் கிராமத்தில் வீட்டுத்திட்டப் பதிவுகள்

(மண்டைதீவு)

மண்டைதீவுப் பகுதியில் வாழ்ந்து வரும் மக்களில் சொந்த வீடு இல்லாத மக்களுக்கு வீட்டுத்திட்டத்தை வழங்குவதற்கான பதிவுகள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேலணை பிரதேச செயலர் பிரிவிலிருந்து வருகை தந்த உத்தியோகத்தர்கள் இக்கிராமத்தில் சொந்த வீடு இல்லாத மக்களிடம் விபரங்களைத் திரட்டினர்.

இதில் வீடுகள் இல்லாதவர்கள், இதுவரை வீட்டுத்திட்டத்திற்கு சிபார்சு செய்தும் கிடைக்காதவர்கள், தற்காலிக வீடு, அரை, நிரந்தர வீடு உள்ளவர்களது விபரங்களும் ஆவண ரீதியாகத் திரட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இக்கிராமத்தில் ஏற்கனவே 50 வீடுகள் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் அமைத்துக் கொடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு பயனாளிகள் தெரிவும் இடம்பெற்றுள்ள நிலையில், இதுவரை அதற்கான ஆயத்தங்கள் எதுவும் நடைபெறவில்லை எனவும் மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. (23)



தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றபோது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதைக் காணலாம். (62)

# கணித செயற்பாடு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 1 - 5 வரை கல்வி கற்கும் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான துரித கணித செயற்பாட்டுப் போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (11)

# முரசின் இன்றைய பலன்

(20.11.2012 - செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் கார்த்திகை மாதம் 05 ஆம் திகதி. நட்சத்திரம் அவிட்டம்.
திதி ஸப்தமி. மரணயோகம் காலை 8.20 வரை. சித்தயோகம் இரவு 11.42 வரை.
இராகுகாலம் 2.50 - 4.17 வரை. சுபநேரம் 10.41 - 12.21 வரை.
எமகண்டம் 9.31 - 10.51 வரை, குளிகன் காலம் 12.21 - 1.31 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | புத்துணர்வும், சுறுசுறுப்பும். பணி எளிதாகும். தொழில் முன்னேற்றம். பணவரவு. வழக்கு சாதகம். நண்பர் விருந்து. குடும்பத்தில் நிம்மதி. வீடு, |
| ரிஷபம் | இனிய பேச்சால் கவர்வீர்கள். உறவினர் வருகை. குடும்பத்தில் மகிழ்ச்சி. எதிர்ப்பாளர் விலகுவர். தொழில சிறக்கும். எதிர்பாராத பணவரவு. மரியாதை கூடும். |
| மிதுனம் | நல்ல செயல் திறம்பட நிறைவேறும். சார்ந்தோரிடமும், நம்பிக்கை வளர உதவுவீர்கள். தொழில், சிறந்து சாதனை. கூடுதல் வருமானம். புதிய அறிமுகம். |
| கடகம் | தவறாக விமர்சித்தவர்களும் அன்பு பாராட்டும் அனுகூல நிலை. பணியில் மகிழ்ச்சி. தொழில் வளர ஆதரவு. தாராள பணவரவு. விரும்பியது செய்வீர்கள். |
| சிம்மம் | கவனச்சிதறல் ஏற்படலாம். செயலில் நிதானம் தேவை. அளவான பணவரவு. பாதுகாப்பு கவனம். மன அமைதிக்கு வழிபாடு. உறவினர்கள், ஆலோசனை. |
| கன்னி | திறமை வெளிப்படுத்த வாய்ப்பு. சகோதரங்களால் பயன். கல்யாணப் பேச்சு. சலுகைகள் கிடைக்கும். பொறுப்புகள் தேடி வரும். புது திட்டம் ஒன்று நிறைவேறும். |
| துலாம் | பெற்ற வசதி பெரிதென போற்றுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி. தொழில் விருத்தி. ஆதாய பணவரவு. தெய்வ வழிபாடு. பொன், பொருள் சேர்க்கை. |
| விருச்சிகம் | எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை. பெற்றோரின் விருப்பம் நிறைவேற்றம். எதிர்காலம் குறித்து ஆலோசனை. கடமையுணர்வு. கோரிக்கைகள் நிறைவேறும். |
| தனுசு | கணவன் - மனைவிக்குள் நெருக்கம். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நட்பு வட்டம் விரியும். உடல் நலம் சீராகும். களிப்பு. |
| மகரம் | செயல்களில் ஒருமுகத்தன்மை. உண்மை, நேர்மையால் பயன். தொழில் இடையூறு விலகும். உபரி வருமானம். உறவினர்கள், நண்பர்களால் ஆதாயம். |
| கும்பம் | முன்யோசனையுடன் செயல்படுவீர்கள். தொழில் வளர்ச்சி. அதிக பணவரவு. குடும்பத்தேவை பூர்த்தி. உடல்நலம் பலம்பெறும். உதவிகள் கிடைக்கும். |
| மீனம் | கடின உழைப்பு. வரவை விட செலவு. பயணத்திட்டத்தில் மாறுதல். தொழிலில் போட்டி. எதிர்பார்த்தது நடக்க தாமதமாகலாம். மாற்று உபாயத்தால் நன்மை. |

# ஹேரத் அசத்தல் பந்துவீச்சு இலங்கை அணி அபார வெற்றி



(காலி)

ரங்கண ஹேரத்தின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 10 விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி காலியில் நடைபெற்றது.

இதில் முதல் இனிங்ஸில் நியூசிலாந்து அணி 221 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இலங்கை அணி முதல் இனிங்ஸில் 247 ஓட்டங்களைப் பெற்றது.


இந்நிலையில் 26 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி ரங்கண ஹேரத்தின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் நியூசிலாந்து அணி அதன் இரண்டாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் பிளைன் 20, ரெய்லர் 18, குப்ரில், மக்கலம், ப்ரைங்கிளின் தலா 13 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ரங்கண ஹேரத் 18 ஓவர்கள் பந்து வீசி 43 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் குலசேகர, ராண்டீவ் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 93 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை அணி, விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கருணாரட்ண 60, பரணவிதான 31 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். இவ்வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இலங்கை அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இரு இனிங்ஸிலும் 11 விக்கெட்டுக்களை வீழ்த்தி இலங்கை அணியின் வெற்றிக்கு வித்திட்ட ரங்கண ஹேரத் போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இதேவேளை, இப்போட்டி இரண்டரை நாட்களுக்குள் முடிவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.



## ஓஜா, புஜாரா சிறப்பான செயற்பாடு
# இந்தியா இலகு வெற்றி



(அகமதாபாத்)

புஜாரா, ஓஜா ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி அகமதாபாத்தில் நடைபெற்றது.

2ஆவது இன்னிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 406 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இங்கிலாந்து அணித் தலைவர் குக் 176, மட் பிரையர் 91, பிரெஸ்னன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஓஜா நான்கு, உமேஷ் யாதேவ் மூன்று, சகிர்கான் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 80 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் புஜாரா 41, ஹோலி 14 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். மற்றும் சேவாக் 25 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை ஸ்வான் கைப்பற்றினார். இதன் மூலம் ஒன்பது விக்கெட்டுக்களால் இந்திய அணி வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக புஜாரா தெரிவானார். இந்திய முதல் இனிங்ஸ் 521/8. இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 191.

நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.



## டெஸ்ட் தொடரை வெல்வோம்



(அடிலெய்ட்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றிக் கொள்வோம் என தென்னாபிரிக்க வீரர் டிவிலியர்ஸ் தெரிவித்தார்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது ஏமாற்றம் அளிக்கிறது. இப்போட்டியில் எங்கள் அணியின் துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது. ஆனால் பந்துவீச்சு எங்களுக்குச் சாதகமாக அமையாதது பின்னடைவை ஏற்படுத்தியது. அவுஸ்ரேலிய அணியின் முதல் மூன்று விக்கெட்டுகளை விரைவில் கைப்பற்றிய எங்கள் பந்துவீச்சாளர்கள், பின் சிரமப்பட்டனர். இதனால் மைக்கல் கிளார்க், கோவன், மைக்கல் ஹசி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி, அவுஸ்ரேலிய அணிக்கு வலுவான இலக்கைக் பெற்றுக் கொடுத்தனர்.

இன்னும் இரண்டு போட்டிகள் மீதமிருப்பதால், தொடரைக் கைப்பற்ற எமக்கு நிறைய வாய்ப்புகள் உள்ளது. அடிலெய்டில் நடக்கவுள்ள இரண்டாவது டெஸ்டில், எங்கள் அணியில் இடம் பெற்றுள்ள முன்னணி பந்து வீச்சாளர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சாதிப்பார்கள் என நம்புகிறேன். முதல் டெஸ்டில் நிறைய பாடம் கற்றுக் கொண்டோம். இப்போட்டியில் செய்த தவறுகளை திருத்திக் கொண்டு, அடிலெய்டில் நடக்கவுள்ள 2ஆவது டெஸ்டில் வெற்றி பெற முயற்சிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒரு நாள் அணி அறிவிப்பு



பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒரு நாள் போட்டி தொடருக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்களதேஷ் அணியுடன் மேற்கிந்தியத்தீவுகள் மோதவுள்ள்து. இப்போட்டியில் மோதவுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வீரசம்மி பேர்மாள், கெரன் பவல் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முதலாவது டெஸ்ட் போட்டியில் சுனில் நரைனை விட வீரசம்பி பேர்மாள் பலமடங்கு சிறப்பாகப் பந்து வீசியதுடன், கெரன் பவல் இரு இனிங்ஸ்களிலும் சதம் பெற்று ஆட்டநாயகன் விருதையும் வென்றிருந்தார்.

அத்தோடு டெஸ்ட் தொடரில் உடற்தகுதிப் பிரச்சினைகளுக்காகச் சேர்க்கப்பட்டிருக்காத கேமர் ரோச் ஒருநாள் குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:

டரன் சமி, கெரன் பொலார்ட், ரீனோ பெஸ்ட், டெரன் பிராவோ, கிறிஸ் கெய்ல், சுனில் நரைன், வீரசம்பி பேர்மாள், கெரன் பவல், ரவி ராம்போல், கேமர் ரோச், அன்ட்ரே ரசல், மார்லன் சாமுவேல்ஸ், லென்டில் சிமன்ஸ், டுவைன் ஸ்மித், டெவோன் தோமஸ்.

## பார்சிலோனா வெற்றி

(பார்சிலோனா)

ரியல் சரகோஸா அணிக்கு எதிரான லா லிகா கால்பந்து லீக் போட்டியில் பார்சிலோனா வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா நகரில் நடந்த லா லிகா கால்பந்து தொடரின் லீக் போட்டியில் பார்சிலோனா, ரியல் சரகோஸா அணிகள் மோதின. இதில் தொடக்கம் முதல் பார்சிலோனா அணி வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். போட்டியின் 16ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் மெஸ்சி ஒரு கோல் அடித்தார். இதற்கு ரியல் சரகோஸா அணியின் பிரான்சிஸ்கோ 24ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார். பின் அலெக்ஸ் சாங் 28ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். முதல் பாதியில் பார்சிலோனா அணி 2-1 என முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு மெஸ்சி 60ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். இதற்கு ரியல் சரகோஸா அணி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை. முடிவில் பார்சிலோனா அணி 3-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றொரு பேர்ட்டியில் ரியல் மாட்ரிட் அணி, பில்பாவோ அணியை 5-1 என வீழ்த்தியது

## மீள்பரிசீலனை

கிரிக்கெட் சபைகளின் விவகாரத்தில் அரசுகள் தலையிடுவதற்கு தடை செய்யும் ஐ.சி.சி. தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யவுள்ளதாக அதன் தலைவர் அலன் ஐசக் தெரிவித்தார்.

பல நாடுகளிலும் கிரிக்கெட் அபிவிருத்திக்கு அந்நாடுகளின் அரசுகள் முக்கிய பங்கேற்றும் நிலையில் இந்தத் தடையை மீள்பரிசீலனை செய்ய திட்டமிட்டிருப்பதாக ஐசக் குறிப்பிட்டார்.

அரசுகள் கிரிக்கெட் சபை விவகாரத்தில் தலையிடுவதற்கு வழங்கப்படும் தண்டனைகளை தளர்த்துவது குறித்து எதிர்வரும் ஐ.சி.சி. வருடாந்த மாநாட்டில் திட்டமிட்டிருக்கிறோம் என பீங்களாதேஷ் சென்றுள்ள ஐ.சி.சி. தலைவர் தெரிவித்துள்ளார். ஒரு சில நாடுகளில் கிரிக்கெட் உட்பட ஏனைய விளையாட்டுகள் அந்நாட்டு அரசுகளில் தங்கியிருக்கிறது.

இதனால் நாம் ஒரு சில விடயங்களில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டியுள்ளது. ஆனால் அந்த மாற்றங்கள் குறித்து இப்போது எந்தக் கருத்தும் கூற முடியாது என்றும் ஐசக் கூறினார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவரை நியமிப்பது அந்நாட்டு அரசாகும். முன்னாள் தலைவர் முஸ்தபா ஹஸான் ஐ.சி.சி.யின் துணைத் தலைவராக பொறுப்பேற்ற பின் அந்நாட்டில் புதிய தலைவரான நஸ்முல் ஹஸனையும் அரசே நியமித்தது.

அதேபோன்று இலங்கையின் கிரிக்கெட் சபை உறுப்பினர்கள் வாக்கெடுப்பு மூலம் நியமிக்கப்பட்டாலும் சபையின் பாரிய நிதி விவகாரங்களை முன்னெடுக்க அரசின் அனுமதி வேண்டும். அதேபோன்று அணி வீரர்கள் தேர்வுக்கு விளையாட்டுத் துறை அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டும். இவை ஐ.சி.சி.யின் புதிய சட்டத்தில் சிக்கலுக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது

# யாழ். கூடைப்பந்து அணி அமைச்சருடன் சந்திப்பு



யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியினர் கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கொழும்பில் நடைபெற்ற தேசிய மட்டத்திலான கூடைப்பந்தாட்ட போட்டியின் காலிறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் முகமாக கொழும்பு சென்ற யாழ். மாவட்ட அணியினர் கடந்த வெள்ளிக்கிழமை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்து கலந்துரையாடினர். இச்சந்திப்பில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன், யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட பயிற்றுநர் ரமணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காலிறுதிப் போட்டியில் இராணுவ அணியுடன் மோதிய யாழ். மாவட்ட அணியினர் தோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆவரங்கால் மத்தி சம்பியன்

(கோப்பாய்)

ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்டப் போட்டியில் கோப்பாய் வலயத்தில் ஆவரங்கால் மத்தி அணி சம்பியனானது. அத்துடன் மாவட்ட மட்டப் போட்டிக்கும் ஆவரங்கால் மத்தி அணி தகுதிபெற்றுள்ளது.

கோப்பாய் வலய கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட ஜனாதிபதி தங்கக் கிண்ணத் தெரிவுப் போட்டி கடந்த சனிக்கிழமை புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்களுக்கான காலிறுதிப் போட்டியில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து சிறுப்பிட்டி ஜனசக்தி அணி மோதவிருந்தது. இதில் ஜனசக்தி அணி சமுகமளிக்காமையால் கலைமதி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. மற்றைய போட்டியில் நீர்வேலி ஐக்கிய அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் அணி மோதவிருந்தது. இதில் நீர்வேலி ஐக்கிய அணி சார்பாக. பதிவு செய்யப்பட்ட வீரர்கள் சமுகமளிக்காததால் ஸ்ரார் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து ஆவங்கால் மத்தி அணி மோதியது. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆவரங்கால் மத்திய அணி 3-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.


மற்றைய அரையிறுதிப் போட்டியில் ஸ்ரார் அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதவிருந்தது. இதில் இந்து இளைஞர் அணியின் பதிவு செய்யப்பட்ட வீரர்கள் வருகை தரமையால் ஸ்ரார் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

தொடர்ந்து இடம்பெற்ற இறுதிப் போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் அணியும், ஆவரங்கால் மத்தி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே வேகமான ஆட்ட முறையை மேற்கொண்ட ஆவரங்கால் மத்தி அணியை ஸ்ரார் அணியால் சமாளிக்க முடியவில்லை. இறுதியில் ஆவரங்கால் மத்தி அணி 25-16, 25-16, 25-20 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கோப்பாய் வலய சம்பியனானது. அத்துடன் மாவட்ட மட்டப் போட்டிக்கும் ஆரங்கால் மத்தி தகுதிபெற்றுள்ளது.

இதேவேளை, பெண்களுக்கான தெரிவுப் போட்டியில் கோப்பாய் ஐக்கிய அணி வெற்றிபெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(118,93)

# ரக்பி பயிற்சி முகாம்



(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கான ரக்பி பயிற்சிப் பட்டறை கடந்த சனிக்கிழமை யாழில் ஆரம்பமானது. யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகம் மற்றும் சப்ரகமுவ ஸ்டேலியன்ஸ் ஏற்பாட்டில் ரக்பி பயிற்சி பட்டறை ஆரம்பிக்கப் பட்டன.

கல்வி சிறந்த கல்விமான்களை உருவாக்குவது போல் விளையாட்டும் ஆரோக்கியமான சமுதாயத்தினை உருவாக்கும் என்ற சிந்தனையின் மூலம் மாணவர்களிடையே சிறந்த திறமையையும், ஆற்றலையும் வெளிப்படுத்தும் நோக்கத்துடன், யாழ். பாதுகாப்பு படைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க சப்பிரகமுவ ஸ்டேலியன்ஸ் நிறுவனப் பணிப்பாளர் வர்ண டி சில்வாவினால் மாணவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் இருந்து, சென். பற்றிக்ஸ் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்து கல்லூரி, மாதகல் சென் ஜோசப், மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஊர்காவற்துறை சென். அன்ரனிஸ் ஆகிய பாடசாலை மாணவர்கள் இப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டனர்.

பயிற்சிகளின் போது மாணவர்களுக்கு ரக்பி விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்வில், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பயிற்சியில் பங்கு பற்றிய மாணவர்களுக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்கள் ரக்பி விளையாட்டின் மூலம் 2013ஆம் ஆண்டு யூன் மாதம் நடைபெறவுள்ள உலக கிண்ண போட்டியில் பங்கு பற்றிவெற்றியீட்ட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

விளையாட்டுச் செய்திகள்

# அடுத்த மாத முற்பகுதியில் மாவட்ட கால்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுச் சங்கம் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணியினருக்கிடையிலான கால்பந்தாட்ட போட்டிகள் எதிர்வரும் 6, 7ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிலும் நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகளுக்கான நிரல் தயாரிப்பு இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# வலிகாம வலயத்தின் முதல்வன்



(வட்டுக்கோட்டை)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 14 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி சம்பியனாகியது.

வலிகாமம் கல்விவலயத்தைச்சேர்ந்த கால்பந்தாட்ட அணிகளின் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்நெல் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் கோட்ட மட்டத்தில் வெற்றியீட்ட அணிகள் மோதின.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் ஏழாலை ஸ்ரீமுருகன் மகா வித்தியாலயத்தை எதிர்த்து இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மோதியது. முதல் பாதி ஆட்டத்தில் ஹென்றியரசர் கல்லூரி அடுத்தடுத்து 3 கோல்களைப் போட்டு 3 : 0 என்ற கோல் கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஏழாலை ஸ்ரீமுருகன் அணி கோல் போடும் வாய்ப்பை தடுத்தது. இருப்பினும் ஹென்றியரசர் கல்லூரி அணி மேலும் ஒரு கோலைப் போட்டது. இரண்டாவது பாதி ஆட்டத்திலும் ஏழாலை ஸ்ரீமுருகன் கோல் எதனையும் போடவில்லை.

இறுதியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 4 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வலிகாமம் வலயச் சம்பியனாகியது.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதியது. ஆட்டம் முடியும்வரை இரு அணிகளும் கோல் எதனையும் போடவில்லை. சமநிலை தவிர்ப்பு உதையில், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி 3 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.


(93)

உணர்ச்சியைத் தூண்டும் பேச்சில் வல்லவரான வன்னிமண்ணின் இளம் அரசியலாளர் வன்னியில் நடக்கும் என ஆணித்தரமாகச் சொல்லி வருகிறார்.

இருப்பினும், மக்களது சந்தேகம் என்னவெனில் இவரது வலது மற்றும் இடது கரங்களாக வலம் வரும் இரு முக்கிய பிரமுகர்கள் தமது இணைகளைப் பிரிந்து வேறிரு பெண்களுடன் குடித்தனம் நடத்திவருவதற்கும் சிறிலங்கா இராணுவம்தான் காரணமா? என்பதுதான்.

மேற்படி இருவரில் ஒருவர்

# இதற்கும் காரணம் சிறிலங்கா இராணுவமா?



சகல பிறழ்வுகளுக்கும் காரணம் சிறிலங்கா இராணுவத்தின் பிரசன்னமே

கிராமசேவையாளராக நியமனம் பெறுவதற்காகப் போலிக் கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்ததால் அவ்வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டவர்.

இந்த அரசியல் தலைவர் மற்றவர்களது அழுக்குகள் குறித்துப் பேசுவதன் முன்பு தம்முடனுள்ள அழுக்குகளை அகற்றிவிடவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இவ்வாறாக மாசுபட்ட பேர்வழிகளை உதவியாளர்களாக வைத்திருப்பதை விடுத்து, நல்ல தொண்டர்களைத் தம்முடன் வைத்துக்கொள்ளாவிடின், கண்ணாடி வீட்டில் இருந்து கல்லெறிபவராகவே இருப்பார் என்பதே மக்களது கருத்து.

**- இணையத்திலிருந்து**

# மரணமில்லா வாழ்வு



பிறவி என்றால் மரணம் உண்டு. இது, எல்லா உயிர்களுக்கும் பொது. மரணத்தைக் கண்டு அஞ்சுபவர்களே அதிகம். ஒரு உபன்யாசகர் உபன்யாசம் செய்யும் போது, "மரணமில்லாமல் இருப்பதற்கு ஒரு வழி இருக்கிறது. நாளை இரவு 7:00 மணிக்கு உபன்யாசத்தின் போது, அது என்ன வழி என்பதைச் சொல்கிறேன்..." என்று சொல்லி, அன்றைய உபன்யாசத்தை முடித்துப் போய் விட்டார்.

மறுநாள் இரவு ஏழு மணிக்குள் கூட்டம் கூடி விட்டது. மரணம் இல்லாததற்கு வழி சொல்கிறேன் ஏன்றால், யாருக்குத் தான் ஆசை இருக்காது. எத்தனை வயதானாலும், காது கேட்கவில்லை, கண் சரியாக தெரிவதில்லை. வாயில் ஒரு பல் கூட இல்லை.. தடி இல்லாமல் நடக்க முடியாது என்ற நிலையில் இருந்தாலும், இன்னும் கொஞ்ச காலம் உயிர் வாழவே ஆசைப்படுவர். ஏதோ, அந்த லேகியம், இந்த லேகியம் என்று சாப்பிடுவர். எப்படியாவது இன்னும் சில காலம் வாழவே ஆசைப்படுவர்.


"நான் வாழ்ந்தது போதும். சீக்கிரம் போனால் நல்லது..." என்று எத்தனை பேர் சொல்வர். உயிர் மேல் அவ்வளவு ஆசை. ஆனால், எமன் கணக்கு வேறு. அதன்படி தான் அவன் நடந்து கொள்வான். மரணமில்லாததற்கு வழி சொல்கிறேன் என்ற உபன்யாசகர், என்ன சொல்லப் போகிறார் என்று தெரிந்து கொள்ள, அன்று கூட்டம் அதிகமாகவே இருந்தது. அவர் சொல்வதை எழுதிக் கொள்ள பேப்பரும், பேனாவும் சிலர் கொண்டு வந்தனர். சிலர், ஒலிப்பதிவுக் கருவிகள் கொண்டு வந்தனர். ஏழு மணி ஆயிற்று.

சகல ஆடம்பரத்துடன், சீடர்கள் சூழ வந்து, மேடையில் உட்கார்ந்தார் உபன்யாசகர். கூட்டத்தைப் பார்த்து சந்தோஷப்பட்டு பேச ஆரம்பித்தார்... "நேற்று உபன்யாசத்தில் மரணமில்லாமல் இருப்பது எப்படி என்பதை இன்று சொல்வதாகச் சொல்லியிருந்தேன் அல்லவா! இதோ சொல்கிறேன்... கேட்டுக் கொள்ளுங்கள் அல்லது எழுதிக் கொள்ளுங்கள்... மரணமில்லாமல் இருக்க வேண்டுமானால், பிறக்காமல் இருக்க வேண்டும். இது தான் ஒரே வழி..." என்றார்.

கூட்டத்தில் இருந்தவர்களுக்கு ஏமாற்றம். ஐந்து நிமிஷத்தில் கூட்டம் கலைந்து விட்டது. உபன்யாசகரும், சீடர்களும் கடைசியாக எழுந்து போயினர். மரணத்தை தவிர்க்க எல்லாருக்கும் ஆசை தான். அது முடியாது. ஆனால், நல்லதைச் செய்து நன்றாக அனுபவித்து வாழ்ந்தால், இருக்கும் காலத்தை இனிமையாகக் கழித்துவிட்டு செல்லலாம்.

# துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி!

ஏழாம் அறிவில் நம்மையெல்லாம் தமிழன் என்று பெருமைப்பட வைத்த ஏ.ஆர். முருகதாஸ் துப்பாக்கி படத்தில் இந்தியன் என்று மெய்சிலிர்க்க வைத்திருக்கிறார். விஜயகாந்தோ அர்ஜுனோ நடித்திருந்தால் துவண்டு போயிருக்கும்



மசாலா தூவி ஜாலியாக இயக்கியிருக்கிறார் ஏ.ஆர் முருகதாஸ். சரவெடி போல கடபுடாவென பேய்வேகத்தில் பயணிக்கும் திரைக்கதை.. முதல்பாதி அரைமணிநேரமும் இரண்டாம் பாதியில் அரைமணி நேரமும் தொய்வடைந்து கடுப்பேற்றுகிறது. ஆனால் விஜயின் ஸ்கிரீன் பிரசன்ஸும் அலட்டலில்லாத அற்புதமான நடிப்பும் அதையெல்லாம் மறக்கச்செய்கிறது.

இளையதளபதியும் வருங்கால முதல்வருமான விஜய், தன்னுடைய அடுத்த அமெரிக்க ஜனாதிபதி கனவையெல்லாம் தூக்கி பரணில் போட்டுவிட்டு நடித்திருப்பது ஆறுதல். படத்தில் ஐயாம் வெயிட்டிங் என்பது மட்டும்தான் விஜய் பேசுகிற ஒரே பஞ்ச் டயலாக். ஒருவேளை இந்தப் படம் ஹிட்டானால் மறுபடியும் பஞ்ச் பேசுவேன் என்பதை சிம்பொலிக்காக சொல்கிறாரோ என்னவோ!

முக்கால் பேண்ட்டோடு சுவருக்கு சுவர் தாவுவதும், ஸ்டைலாக துப்பாக்கியால் டுமீலுவதாகட்டும், தென்னிந்திய ஜேம்ஸ்பொண்டாக மிளிர்கிறார் விஜய். ஒரே ஒரு துப்பாக்கியோடு உலகத்தை காப்பாற்றும் வேலையாக இருந்தாலும் அதையே ஸ்டைலாக செய்தால் மக்கள் ரசிப்பார்கள் என்பதை தியேட்டரில் உணர முடிந்தது. காஜல் அகர்வால் குலுங்க குலுங்க நடித்திருக்கிறார். ஆனால் அவர் படத்தில் எதற்காக என்பது முருகதாஸுக்கு மட்டுமே தெரிந்த உண்மையாக இருக்கலாம்.

அவர்களுடைய மார்க்கெட்டை தூக்கி நிறுத்த உதவியிருக்கும். விஜய் நடித்ததால் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. அவருடைய மார்க்கெட்டும் சரிந்துகொண்டுதானே இருந்தது.

நாட்டுக்கு ஆபத்து வரும்போதெல்லாம் சம்பவாமி யுகே யுகே என்று நம்முடைய மல்டிபிள் ஸ்டார்ஸ்களே முன்னால் வருவார்கள். அதுபோலவே துப்பாக்கி படத்திலும் விஜய் தோன்றி அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுகிறார்.

மலைப்பகுதியில் தனிவீட்டில் குடும்பத்தோடு வசிக்கும் வில்லன். அவனுக்கு போரடிக்கும்போதெல்லாம் காரணமேயில்லாமல் மும்பையில் குண்டு வைத்து விளையாடுகிறான். காஷ்மீர் தீவிரவாதிகளை பந்தாடி போர் அடித்து லீவு போட்டுவிட்டு மும்பைக்கு வருகிறார் விஜய்.

வில்லன் வைத்த குண்டை இவர் எடுக்க... இவர் வைத்த குண்டை அவர் எடுக்க... இவர் அண்ணனை அவர் சுட்டுக்கொல்ல... இவர் தங்கச்சியை அவர் கடத்த... கடைசியில் என்னாகும்ன்னா... இதையெல்லாம் நான் எழுதிதான் தமிழுலகம் தெரிந்துகொள்ள வேண்டுமா என்ன? யெஸ்... தர்மம் வென்றது.

ரொம்ப பழைய கதையை எடுத்து பட்டி டிங்கரிங் பார்த்து... புதிதாக திரைக்கதை அமைத்து ஆங்காங்கே டொம் அன் ஜெர்ரி

காமெடி சுத்தமாக எடுபடவில்லை. ஜெயராம் என்கிற நல்ல நடிகரை ஏன்தான் இப்படி நாசம் பண்றாங்களோ என்பதை தவிர அவரைப்பற்றி சொல்ல ஒன்றுமில்லை.

படத்தின் ஒரே குறை மிகப்பெரிய குறை... மகா மட்டமாக இசையமைத்திருக்கும் ஹாரிஸ் ஜெயராஜ்தான். கூகிள் கூகிள் பாடலை தவிர மற்ற எல்லாமே கடனுக்கு போட்டு கொடுத்த மெட்டுகளை போலவே இருந்தன. மாற்றானில் போட்ட ஒரு பாட்டை அப்படியே இங்கேயும் கொடுத்திருக்கிறார். ஹாரிஸ் ஜெயராஜ். ரீமிக்ஸ் ஜெயராஜாக மாறிவிட்டார்!

2007இல் வெளியான போக்கிரிக்கு பிறகு அசலான ஒரு விஜய் படம் பார்த்த திருப்தி இந்தப் படத்தில் கிடைக்கிறது. விஜய் படங்கள் குடும்பத்தோடு பார்க்க ஏற்றவை. ஆனால் இப்படத்தில் வன்முறை கொஞ்சம் தூக்கல்.

மற்றபடி ஜேம்ஸ்பொண்ட் படங்களின் வேகமும் புத்திசாலித்தனமான திட்டமிடலும் சுறுசுறு திரைக்கதையும். படத்தை எல்லா தரப்பு ரசிகர்களையும் ஈர்த்திருக்கிறது. ஸ்கை:.போலில் எதிர்பார்த்தது துப்பாக்கியில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கவேயில்லை. துப்பாக்கியைப் பற்றி இரண்டு வார்த்தையில் சொல்லவேண்டுமென்றால் "இன்ப அதிர்ச்சி!"

- அதிஷா



# இப்படியும் ஒரு சாதனை

தலையின் நடுப்பகுதியில் மட்டும், 3 அ[illegible] அங்கு[illegible]
முடியை தூக்கி நிறுத்துவதற்காக, ஸ்பிரே, ஜெல் போ[illegible]
பார்த்தால், தலையில் வால் முளைத்த மனிதர் போலவே[illegible]
இதுவரை, இந்த அளவுக்கு தலையின் நடுப்பகுதியி[illegible]
நிறுத்தியது இல்லையாம். இதனால், இவரது பெயர், ச[illegible]
கஜுரியோ கூறுகையில், "விருந்து, முக்கியமான விழாக்[illegible]
இப்படி தூக்கி நிறுத்துவேன். மற்ற நேரங்களில், சாதார[illegible]

# அறிவியல்



கலைப் படைப்புகள் கற்பனையில் உருவாகின்றன என்றும் அறிவியல் கண்டுபிடிப்புகள் யதார்த்தத்தில் உருவாகின்றன என்றும் நாம் நம்புகிறோம். கலைத்துறையில் செய்யப்படும் பரிசோதனை முயற்சிகள் புதிய புனைவு வடிவங்களை உருவாக்குகின்றன, அறிவியல் துறையில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் பழைய பிழைபுரிதல்களைக் களைந்து புதிய உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. இவை இரண்டுக்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி இருப்பதாக நாம் நினைக்கிறோம். ஆக, அறிவியல் வேறு, கலை வேறு என்று நாம் எங்கே எப்படி பிரித்தாலும், கவனமாக யோசித்தால் இரண்டிலுமே புலன்களுக்கு அப்பாற்பட்ட விஷயங்களைப் பற்றிய சிந்தனைக்கும் கற்பனைக்கும் இடமிருக்கிறது என்பதை நாம் அறியலாம். அந்தக் கற்பனையே மானுட சமுதாயத்தை அடுத்தடுத்த காலகட்டங்களுக்கு உகந்ததாக ஆக்குகிறது.

இந்த அதிசய உலகின் புதிர்களே அறிவியலுக்கும் கலைக்கும் பேசுபொருளாகின்றன. அறிவியல் அளிக்கும் விளக்கங்களை முழுமையாக்கி, அவற்றைத் திருத்தி விரித்து உணர்த்தும் தன்மை கொண்ட ஆய்வு வடிவ-

# வெற்றியின் இரகசியம் 10

சி. அருண்பரத்

அடுத்து, மிகவும் முக்கியமான திறமையான, கம்யூனிகேஷன் ஸ்கில் பற்றிப் பார்ப்போம். ஒரு துறையின் தலைவருக்கும், மேலதிகாரிக்கும், ஆசிரியருக்கும், பெற்றோருக்கும், தங்களது கருத்தை வெளிப்படுத்தும் திறமை அவசியம் தேவை.


நாம் தெரியப்படுத்த வேண்டிய விஷயத்தை பேச்சு மூலம், எழுத்து மூலம், அங்க அசைவின் மூலம், நாம் எடுக்கும் முடிவின் மூலம், செயலின் மூலம், அணியும் உடையின் மூலம், ஏன் மவுனத்தின் மூலம் கூட வெளிப்படுத்தலாம். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, நாம் சொல்ல வந்த கருத்து, சம்பந்தப்பட்டவருக்கு சரியாகப் போய்ச் சேர்ந்ததா என்பது தான்.

சிறந்த கருத்து கம்யூனிகேட்டராக இருப்பதற்கு, மேடைப் பேச்சாளராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

அதற்கு, அடிப்படைத் தேவைகள் எவை என்று பார்ப்போம். முதலில் நாம் என்ன பேசப் போகிறோம், யாரிடம் பேசப் போகிறோம், நாம் பேசுவதால் என்ன விளைவு ஏற்பட வேண்டும் என்பதோடு, எந்த இடத்தில் மற்றும் எந்தச் சமயத்தில் பேசுவது என்பது பற்றிய தெளிவும் இருக்க வேண்டும். நாம் பேசும் விஷயத்தைப் பற்றிய ஆழமான அறிவு வேண்டும். சம்பந்தப்பட்ட விவரங்களைச் சேகரித்து, கோர்வையாக மனதில் ஓட விட்டு, அவசியப்பட்டால் ஒத்திகை பார்த்துப் பேசுவது நல்ல பலனைக் கொடுக்கும். நம்முடைய சொந்த விருப்பு, வெறுப்பு, அந்தத் தருணத்தில் நம்முடைய மனநிலை, நாம் சொல்ல வந்த கருத்தை, எந்த விதத்திலும் பாதிக்கக் கூடாது.

ஒரு சூழ்நிலையை ஆராய்ச்சி செய்த பின், சரியான நேரத்தில், தெளிவான முடிவெடுக்கும் திறமை வேண்டும்.

மேலதிகாரிகளுக்கு கண்டிப்பாக இருக்க வேண்டிய திறமை, கண்காணிக்கும் திறமை, யாரிடம் எப்படி வேலை வாங்குவது என்ற சாதுரியம் தெரிந்திருக்க வேண்டும். "ஆடுற மாட்டை ஆடிக் கறக்கணும், பாடுற மாட்டைப் பாடிக் கறக்கணும்" என்ற பாடல், கண்காணிப்பாளர்களுக்காகவே எழுதப்பட்டது. தம்மிடம் வேலை பார்ப்பவர்களை உற்சாகமூட்டி, ஊக்கப்படுத்தி முன்னின்று வழி நடத்தி, அலட்சியமாக இருப்பவரைக் கண்டித்து, வேலை வாங்கும் திறமையை வளர்க்க வேண்டும்.




பதவி உயர உயர, தலைமைப் பண்புகள் வளர வேண்டும். வரலாற்று நாயகர்களுக்கு, தம் குழுவை வழி நடத்துவதில் வசீகரம் இருக்கும். மாவீரன் நெப்போலியன், எந்த பின்புலமும் இல்லாமல், தன் சொந்த முயற்சியில் கப்டன் பதவியை அடைந்தார். அவரை மேலே வளர விடாமல் மேலதிகாரிகள் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருந்தனர். அவரைக் கீழே தள்ளுவதற்காக, பிரிட்டிஷ் கட்டுப்பாட்டிலிருந்த கோட்டையை மீட்கும், கடினமான பணி அவரிடம் தரப்பட்டது. அப்போது, மழை கொட்டிக் கொண்டிருந்தது. இராணுவ வீரர்கள் களைப்புடன் இருந்தனர். "தாக்குதலைத் தள்ளிப் போடலாமே" என, நெப்போலியனிடம் யோசனை கூறினர். அப்போது நெப்போலியன், "நான் முன்னே செல்கிறேன். மற்றவர் அனைவரும் என் பின்னால் வந்து, நான் எப்படி கோட்டையைக் கைப்பற்றப் போகிறேன் என்று வேடிக்கை பாருங்கள்..." என்று சொல்லி, முன்னால் செல்ல ஆரம்பித்தார்.

நெப்போலியனிடம் விசுவாசமாக இருந்த வீரர்கள், ஆக்ரோஷமாக அவரைப் பின் தொடர்ந்து சென்று போராடி, கோட்டையைக் கைப்பற்றினர். மெய்சிலிர்க்க வைக்கும் இந்த வரலாற்று நிகழ்ச்சி, தலைமைப் பண்புக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

ஒரு குழுவோடு சேர்ந்து வேலை பார்க்கும் போது, அனைவரோடும் சேர்ந்து வேலை செய்யும் குழுத்திறமை வேண்டும். நல்ல திறமையிருந்தும், அடுத்தவருடன் ஒத்துப் போகும் குணம் இல்லாதவர்கள், குழுவினரால் நிராகரிக்கப்படுவர். ஒரு குழுவில் வேலை செய்யும் போது, அந்தக் குழுவின் போக்கைப் புரிந்து கொள்ள வேண்டும். அடுத்தவருடைய விருப்பு, வெறுப்பைப் புரிந்து கொள்ளாமல், தன்னிச்சையாக முடிவெடுப்பது, குழுவின் ஒற்றுமையை பாதிக்கும்.

வெற்றி பெற அடிப்படைத் தேவை திறமை. ஆதலால், நம் திறமையைத் தினமும் வளர்த்துக் கொண்டே இருப்போம்.

தொடரும்....



## னை

ஜப்பானைச் சேர்ந்த பிரபல ஆடை அணிகலன் வடிவமைப்பாளர் கஜுரியோ வாட்நபே. புதுமையாக எதையாவது செய்து, சாதனைப் புத்தகங்களில் இடம் பிடிக்க வேண்டும் என்பது, இவரது நீண்ட நாள் விருப்பம். பாஷன் துறையில் இருப்பதால், தன் தலை முடியை வித்தியாசமாக அலங்காரம் செய்து, புதுமை படைக்க முடிவு செய்தார்.

தலையில் அனைத்து பகுதிகளிலும் உள்ள முடியை, "ஷேவ்" செய்தார். உச்சியில் மட்டும், முடியை வளர்க்கத் தொடங்கினார். 15 ஆண்டுகள், இதற்காக கடும் முயற்சி மேற்கொண்டார். இப்போது, அவரது முயற்சிக்கு பலன் கிடைத்துள்ளது.

அங்குல[illegible]ளவுக்கு நீண்ட முடியை வளர்த்துள்ளார். தலை
ஜெல் போன்[illegible]வற்றை பயன்படுத்துகிறார். திடீரென இவரைப்
போலவே இருக்கிறது.
ப்பகுதியில் உயரமான முடியை வளர்த்து, அதை, யாரும் தூக்கி
பெயர், சாதனைப் புத்தகங்களில் இடம் பிடித்துள்ளது. இதுகுறித்து,
ன விழாக்கள் போன்றவற்றுக்கு செல்லும் போது மட்டுமே முடியை,
ல், சாதாரணமாக, கீழே விட்டு விடுவேன்..." என்கிறார்.

## ல் வழி கலை



மாகவும் கலை இருக்க முடியும் என்கிறார் ஜோவோ ரிபாஸ். இவர் அமெரிக்காவின் மாஸசூஸட்ஸ் மாநிலத்தில் உள்ள கேம்ப்ரிஜ் நகரில் இருக்கும் எம்.ஐ.டி லிஸ்ட் காட்சிக்கலை நிலையத்தில் தற்போது அமைக்கப்பட்டுள்ள "தி ஹோலோசீன்" கலைக்கண்காட்சியின் பொறுப்பாளர். விவரங்களை இந்த வலைத்தளத்தில் பார்க்கலாம்:

http://www.newscientist.com/blogs/culturelab/2012/10/beyond-the-boundaries-of-science.html

# மலர்களைக் கண்டு அழுத கவிஞன்!

ஆங்கிலக் கவிஞர் வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் ஒரு மலைச்சாரல் பக்கமாக நடந்து கொண்டிருந்தார். ஓரிடத்தில் வெடிப்புற்ற பாறையின் இடுக்கில் ஒரு மலர்ச்செடி வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தது.

கவிஞர் அதைக் கண்டதும், "சாட்டர்டன்... நீ இங்கேயா இருக்கிறாய்?" என்று கேட்டு கண்களில் நீர் ததும்ப அந்த மலர்ச்செடியை பார்த்துக் கொண்டே இருந்தாராம்.

யார் அந்த சாட்டர்டன்?

14 வயது இளம் கவிஞராக இருந்து, பல புரட்சிகரமான தத்துவக் கவிதைகளை எழுதியவன்தான் சாட்டர்டன். அவன் அந்த இளம் வயதில் அநாதையாக வறுமையின் கொடுமையில் நின்று தவித்தவன்.



ரொட்டித் துண்டுக்காக சிறு சிறு கவிதைகளை எழுதி ஒரு ரொட்டிக் கடைக்காரனிடம் கொடுத்து, "பசிக்கிறது ஏதாவது கொடுங்கள் அய்யா..." என்று கைநீட்டி நிற்பான். குழந்தைபோல் நிற்கும் அவனிடம் இரக்கம் கொண்டு ரொட்டிக் கடைக்காரன் துண்டு ரொட்டிகளைக் கொடுப்பான்.

பசிக்கும் வயிற்றிற்கும் அது போதுமா? போதாது. என்ன செய்வான்?

பக்கத்திலிருந்த சாக்கடைக் கால்வாயின் பயங்கர நெடியை நுகர்ந்து, அதனால் ஏற்படும் மயக்கத்தில் அப்படியே தூங்கிவிடுவான்!

ஒருநாள் ஒரு கவிதையை எழுதி அதில் தன் பெயரை எழுதாமல் அப்போது புகழ்பெற்றிருந்த பெருங்கவிஞர் தோமஸ் கிரேயின் பெயரை எழுதி ஒரு பத்திரிகைக்காரரிடம் கொடுத்து,

"ஐயா இதை தோமஸ் கிரே கொடுக்கச் சொன்னார். அவர் வரமுடியவில்லையாம். எனக்கு ஏதாவது 'காசு கொடுங்கள்" என்று வேண்டினான்.

அப்போதெல்லாம் கவிஞர் தோமஸ் கிரேயின் கவிதைகளை பத்திரிகைகளில் போடுவதே ஒரு பெருமை. ஏராளமானப் பத்திரிகைகள் விற்பனையாகும். பத்திரிகையாளர் அந்தப் பாடலைக் கண்டதும் மிக மகிழ்ச்சியோடு வாங்கிக்கொண்டு, "சிறுவனே இந்தா" என்று சில காசுகளைக் கொடுத்தார். சாட்டர்டன் மிக்வும் ஆவலோடு காசுகளைப் பெற்றுக்கொண்டு வழக்கமான ரொட்டிக் கடைக்காரனிடம் சென்று ரொட்டியை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு வழக்கமாகப் படுத்துக்கொள்ளும் சாக்கடைக் கால்வாயின் வெடிப்பில் முகம் வைத்து அந்த நெடியை நுகர்ந்தவனாய்த் தூங்கிவிட்டான்.

பத்திரிகையில் தன் பெயரில் ஒரு பாடலைக் கண்ட தோமஸ் கிரே வியப்படைந்தார். பத்திரிகையாளரிடம் அது பற்றிக் கேட்டார்.

"ஒரு சிறுவன் தாங்கள் கொடுத்தனுப்பியதாகச் சொல்லித்தான் இந்தக் கவிதையை என்னிடம் கொடுத்தான்" என்றார் பத்திரிகையாளர்.

கவிதையோ மிக அற்புதமாக இருந்தது. தன்னிலும் ஒரு சிறந்த கவிஞனே அதை எழுதி இருக்க முடியும் என்றெண்ணி-

"இந்தக் கவிதைகளை எழுதிய அந்தப் பெரும் கவிஞனை நான் உடனே பார்க்க வேண்டும்" என்றார் தோமஸ் கிரே.

விசாரித்ததில் ரொட்டிக் கடைக்காரனுக்குத்தான் அந்தச் சிறுவனை தெரியும் என்றார்கள்.

ரொட்டிக் கடைக்காரரைக் கண்டு அவரிடம் கேட்டபோது, "அதோ அந்த சாக்கடை வெடிப்புக்குப் பக்கம் தூங்கிக் கொண்டிருப்பான்" என்றார்.

அங்கே சென்று தோமஸ் கிரே படுத்திருக்கும் சாட்டர்டனை எழுப்பினார். அவன் எழுந்திருக்கவில்லை. சில மணி நேரங்களுக்கு முன்புதான் அவன் இறந்திருந்தான்.

இதைப்படித்த வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் அழகிய மலர்களைக் காணுகின்ற போதெல்லாம் சாட்டர்டன் நினைவு வந்து, ஒரு குழந்தையைப் போல கண்ணீர்விட்டு தேம்பித் தேம்பி அழுவாராம்!

# சிறைச்சாலை வன்முறைச் சம்பவம்

# ஐ.நா.வில் முறைப்பாடு செய்யப்படும்



(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலை வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் முறைப்பாடு செய்யப்பட உள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் தகவல்களை திரட்டி வருகின்றோம்.

முற்றுமுழுதாக வன்முறை பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டதன் பின்னர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் முறைப்பாடு செய்யப்படும். வன்முறைகள் வெடித்த போது இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை மீறி சிறைச்சாலைத் திணைக்களம் செயற்பட்டுள்ளது.

வன்முறைகள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் செயற்பாடுகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

# இராணுவத் தளபதி மடு விஜயம்



(மன்னார்)

மன்னார் மடு தேவாலயத்தில் அடுத்த வருடம் இடம்பெறவுள்ள வருடாந்த உற்சவத்துக்கு முன்னர், தேவாலயத்தை புனரமைக்க அவசியமான நடவடிக்கைகள் குறித்து கண்டறிவதற்காக இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய மடு தேவாலய பகுதிக்கு விஜயம் செயதுள்ளார்.

## சிறைச்சாலை ஆயுதங்கள் பாதுகாப்பு அமைச்சிடம்

(கொழும்பு)

சிறைச்சாலையின் ஆயுதங்களைப் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்குமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி சிறைச்சாலைத் திணைக்களத்திற்கு சொந்தமாகக் காணப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும், பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட உள்ளது.

ரி-56 ரக துப்பாக்கிகள் அனைத்தும் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென கடந்த 16ஆம் திகதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வெலிக்கடைச் சிறைச்சாலை கலவரத்தின் போது ரி-56 தானியங்கி துப்பாக்கிகளை கைதிகள் பெற்றுக் கொண்டதனால் பாரிய அழிவுகள் ஏற்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன்னர் கம்பஹாவில் சிறைச்சாலை அதிகாரிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, பாதாள உலகக் குழுத் தல்லவ்ர் தப்பிச் சென்றதனைத் தொடர்ந்து, சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு ரி-56 ரக துப்பாக்கிகள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## மூடப்பட்ட பாடசாலைகள் மீண்டும் நேற்று திறப்பு

(கொழும்பு)

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணத்தில் மாணவர்களது திடீர் சுகயீனம் காரணமாக தற்காலிமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் மீண்டும் நேற்று திறக்கப்பட்டுள்ளன.

கம்பொலை, ஜினராஜ மகளிர் பாடசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாணவிகள் திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது அப்பாடசாலையின் 1000 மாணவிகள் கம்பொலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை பலாங்கொடை வெலிக்கபொல. பிரதேச பாடசாலை ஒன்றிலும் சுக்யீனம் காரணமா்க மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. எனினும் இத்திடீர் சுகயீனத்திற்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

மாணவர்களுக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டமை குறித்து பயம் கொள்ளத் தேவையில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## இனத்தை அடையாளப்படுத்தும் நடைமுறை ஒழிக்கப்படவேண்டும்

(கொழும்பு)

சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம் என அடையாளப் படுத்தும் நடைமுறைகள் ஒழிக்கப்பட வேண்டுமென இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் வாழும் மக்களை இந்திய வம்சாவளித் தமிழர்கள் என அடையாளப் படுத்தக் கூடாது.

சிங்கள மக்களும் இந்தியாவிலிருந்து வந்தவர்கள். எனினும் அவர்களை இந்திய சிங்களவர் என குறிப்பிடுவதில்லை. இலங்கையில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்படும்.

இந்திய அரசாங்கம் இந்தத் திட்டங்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றது என்றார்.

## எரிவாயுவின் விலையை அதிகரிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

எரிவாயுவின் (காஸ்) விலையை அதிகரிப்பது தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகாரசபையிடம் லாப் காஸ் கம்பனி அனுமதி கோரியுள்ளது என்று அவ்வதிகாரசபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, சர்வதேச சந்தையில் காஸ் விலை தொடர்பில் அண்மைக்காலமாக நிலவிய ஏற்றத்தாழ்வுகள் குறித்து அவதானித்து வருவதாகவும், அதன் பின்னரே மேற்படி நிறுவனத்தின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், குறித்த கம்பனிக்கு காஸ் விலையை அதிகரிப்பதற்கான அனுமதி வழங்குவதா இல்லையா என்பது தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகாரசபை இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இரணைப்பாலைப் பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - இரணைப் பாலைப் பகுதியில் புதைத்துவைக் கப்பட்டிருந்த ஒரு தொகுதி வெடிபொருட் களை மன்னார் பொலிஸ் விசேட புலனாய்வுப்பிரிவினர் நேற்று முன்தினம் காலை மீட்டுள் ளனர்.

மன்னார் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அங்கு சென்ற மேற்படி குழுவினர், புதைத்து வைக்கப்பட்டிருந்த ஒருதொகுதி வெடிபொருட்களை மீட்டுள்ளனர்.

12.7 மில்லிமீற்றர் குண்டுகள் 217, 15 மில்லிமீற்றர் குண்டுகள் 18, ரி 56-ரக துப்பாக்கிகள் 370, எம்.பி,எம்.ஜி குண்டுகள் 640, 18 மில்லிமீற்றர் எச்.இ.ஏ.ரி குண்டுகள் 2, கைக்குண்டு 1 ஆகியனவே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெடிப்பொருட்களைச் செயலிழக்கச் செய்வதற்காக இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## விரைவில் மீள்குடியேற்றப்படுவர்

வடக்கிலிருந்து புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் விரைவில் மீள் குடியேற்றப்படுவார்கள் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 22 ஆண்டுகளுக்கு முன்னர் ஆயிரக் கணக்கான தமிழ் பேசும் முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறு விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்கள் அவர்களின் சொந்த இடங்களில் உடனடியாக மீள்குடியேற்றப்படுவர். வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டு 22 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போது அமைசசர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

## சபாநாயகர் - சட்டத்தரணிகள் நாளை பேச்சுவார்த்தை

(கொழும்பு)

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுடன் நாளை பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபடவுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்போது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவிற்கு எதிரான குற்றப் பிரேரணை குறித்து பேசவுள்ளதாக அச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில் இலங்கை சட்டத்தரணிகள் சங்க உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இப்பேச்சு இடம்பெறவுள்ளது.





பலவருடங்களின் பின் மீளக்குடியேறிய மக்களின் நலன் கருதி பொன்னாலையில் சங்கானை பல்நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கிளை நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், ஈ.பி.டி.பி. வலிகாமம் அமைப்பாளரும் வலி.மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித்தலைவருமான சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்), மீள் எழுச்சித்திட்டப்பணிப்பாளர் சுதர்சன், சங்கானை திட்டமிடல் பணிப்பாளர் சிவகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதில் வலி.மேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றுவதையும் மக்களுக்கு உலர் உணவுப்பொருள் வழங்குவதையும் காணலாம்.

# அடிக்கடி தடைப்படும் மின்சாரம்; 'வெல்டிங்' தொழில் பாதிப்பு

(அச்சுவேலி)

இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் பிராந்திய மின்சார சபை அலுவலகத்தினால் வாரா வாரம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மின்வெட்டுக் காரணமாக நீர்வேலி, சிறுப்பிட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த வாகன மீள் நிர்மாணப் பணிகளை (வெல்டிங் ரிங்கரிங் கராச் வேக்கர்) மேற்கொண்டு வரும் தொழிலாளர்கள் தமது அன்றாட ஜீவனத்திற்குரிய வருமானத்தைக் கூட பெற்றுக் கொள்ள முடியாத இக்கட்டானதொரு சங்கட நிலைக்குள் தள்ளப்பட்டிருப்பதாக மிகவும் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில மாதங்களாக வாரா வாரம் கிரமமான முறையில் சுன்னாகம் மின்சார சபையினால் அமுல்படுத்தப்பட்டு வரும் மின்வெட்டினால் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் நீர்வேலி, சிறுப்பிட்டி போன்ற சில கிராமங்கள் வாரத்தின் ஏழு நாட்களில் மூன்று அல்லது நான்கு நாட்கள் பகல் வேளையில் மின்சாரம் அற்ற நிலையில் காணப்படுகின்றன. இதனால் அப்பகுதியைச் சேர்ந்த வாகன மீள் நிர்மாணப் பணிகளை மேற கொண்டுவரும் தொழில் நிறுவனங்களின வேலைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டு வருவதுடன்;அவற்றில் தொழில் புரிந்து வரும் அன்றாடக் கூலித் தொழிலாள்ர்களும் வேறு வேலைகள் எதுவுமற்ற நிலையில் வாழ்க்கைச் செலவிற்கே திண்டாடிக் கொள்வதாக மிகவும் மனந்நொந்து கூறுகின்றனர்.

ஒருசில வாரங்கள் இவ்வாறு வாரத்தில் அதிக நாட்கள் மின்வெட்டை அமுல்படுத்தியிருந்தால், அதனால் தமக்கு இவ்வாறு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்காது எனத் தெரிவிக்கும் தொழிலாளர்கள், கடந்த பல வாரங்களாக வாரத்தில் மூன்று முதல் நான்கு நாட்கள் மின்சாரம் கிடைப்பதில்லை எனவும் இதிலும் குறிப்பாக சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் இரு நாட்களும் தொடர்ந்து மின் கிடைப்பதில்லை எனவும் இவ்வாறன நிலை நீண்டநாட்களாக இருந்து வருவதாகவும் தெரிவிப்பதுடன், தங்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டாவது இப்பகுதிகளுக்குரிய வார மின் வெட்டுத் தினங்களை குறைத்து தமது குடும்பங்களும் வாழ்க்கையை நடாத்திச் செல்லக் கூடிய வகையில் மின்சாரசபை அதிகாரிகள் உரிய நடவடிக்கைளை மேற்கொள்ள முன்வரவேண்டும் என்றும், இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட ஏனைய உயர் அதிகாரிகளும் தலையிட்டு தமது பிரச்சினைக்கு விரைவான தீர்வு கிடைக்க ஆவன செய்ய வேண்டும் எனவும் விரும்புகின்றனர்.

குறிப்பாக நீர்வேலி, சிறுப்பிட்டி ஆகிய பிரதேசங்களில் மட்டும் இவ்வாறான சுமார் எட்டு வரையான வாகனத் தொழிற்சாலைகள் மின்சாரத்தை நம்பி இயங்கி வருவதும் குறிப்பிடத் தக்கது. (03)

# வீதிப் புனரமைப்பில் தாமதம்; போக்குவரத்து நெருக்கடி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - புத்தூர் சந்தியிலிருந்து மீசாலை புகையிரத நிலையம் வரையான பிரதான வீதியில் காபற் வீதி அமைப்பதற்காக பரவப்பட்ட கருங்கற்களினால் விபத்துக்களும், வாகனங்களுக்கும் சேதம் ஏற்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். பல நாட்களாக கற்கள் பரவப்பட்ட நிலையில் காபற் போடப்படாததால் வாகனங்களுக்காக கரையொதுங்கும் போது கற்களில் சறுக்கி துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிளில் செல்வோர் விபத்துக்களைச் சந்திக்கின்றனர்.

நேற்று முன்தினம் வீதியோரமாக நடந்து சென்ற பாதசாரியை வீதியால் சென்று கொண்டிருந்த வாகனத்தின் சில்லில் அகப்பட்ட கருங்கல் சிதறி மேலெழுந்து அடித்ததில் அப்பயணி காயமடைந்த நிலையில் அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கவனத்தில் எடுத்து உடனடியாக காபற் போட்டு வீதியைப் புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (11)

# மர நடுகை வேலைத்திட்டம்



(யாழ்ப்பாணம்)

நல்லூரில் 'தேசத்துக்கு நிழல்' (தெயட்ட செவன) தேசிய மரநடுகை வேலைத்திட்டம் ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச இணைப்பாளரும் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அம்பலம் இரவீந்திரதாசனால் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நல்லூர் சமுர்த்தி மகாசங்க வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், உதவி பிரதேச செயலர் ம.சுபாஜினி, நல்லூர் பிரதேச உதவி திட்டப் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி தலைமை அதிகாரி த.தயாகரன், சமுர்த்தி மகாசங்கத்தின் முகாமையாளர் ஜோ.ராகினி, சமுர்த்தி வங்கி சங்கங்களின் முகாமையாளர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வழிகாட்டல் கருத்தரங்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் இவ்வாண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான கணிதம் மற்றும் விஞ்ஞான பாடக் கருத்தரங்குகள் இன்று செவ்வாய் கிழமை காலை 8.30 மணி முதல் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளையின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது. (11)





வவுனியா விபுலானந்தாக்கல்லூரியில் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டுவிழா கல்லூரி மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் வேலுப்பிள்ளை இந்திரன் தலைமையில் இடம் பெற்றபோது அதிதிகள் அழைத்து வரப்படுவதையும், பாராட்டுப்பெறவுள்ள மாணவர்களையும் காணலாம்.
(படங்கள்: வவுனியா நிருபர் 160)

# பதிவிருக்கப் பெட்டகம்

"நீங்கள் எங்களுக்காகச் சாகுங்கள்" என்கிறார்கள் வயதானவர்கள். இளைஞர்களை தங்களுக்காகச் சாகச் சொல்கிறார்கள். இதற்கு எங்கள் பதில்: இராணுவத்தில் சேருவதற்கான அட்டைகளைக் கொளுத்துவதும், இராணுவத்தில் சேராமல் ஏமாற்றுவதும்! நாங்கள் உங்களுக்காகச் சாக மாட்டோம்!

**– வியட்நாம் போரின்போது அமெரிக்க ஹிப்பிகளின் பிரகடனம்**

என் வீரர்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டால், ஒருவர் கூடப் படையில் இருக்க மாட்டார்கள். **– மகா ஃப்ரெட்ரிக்**

ஒடுக்குமுறைக்கு எதிராக மௌனமாக இருக்கும் மனிதன் அனைத்து அம்சங்களிலிருந்தும் இறந்துவிடுகிறான். **– வோலே சோயின்கா**

நல்லவற்றில் நம்பிக்கை கொள்ளாதவன், தீயவற்றைச் செய்ய அஞ்சவே மாட்டான்.– **இங்கிலாந்துப் பழமொழி**

ஒவ்வொரு மனிதனுக்குள்ளாகவும் Boiler–ன் அடைபட்டிருக்கும் நீராவி போல் அன்பு நிறைந்திருக்கிறது. இந்த நீராவி விரிவடைகிறது. பிஸ்டன்களை இயக்கி வேலை செய்கிறது. **– டால்ஸ்டாய்**

"தாஸ்தாயெவ்ஸ்கி, கன்ஃபூசியஸின் சிந்தனைகளையும் புத்தரின் கொள்கைகளையும் அறிமுகப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும் – அது அவரைச் சாந்தப்படுத்தியிருக்கும்" என்று டால்ஸ்டாய் மக்சீம் கோர்க்கிக்கு கூறினாராம். அப்போது 'கீழுலக மனிதன்' தனது வளையிலிருந்து ஏளனமாகச் சிரித்திருப்பான். நம் காலம் அவனது ஏளனத்திற்கு உருக்கொடுத்திருக்கிறது. சாவுக் கிடங்குகளும் சித்திரவதைக் கூடங்களும் நிறைந்த உலகு. தனிப்பட்டும், கூட்டமாகவும் மனிதர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ளும் மனப்பான்மை, விலங்குத்தன்மை இவற்றில் தாஸ்தாயெவ்ஸ்கிக்கு இருந்த உள்ளொளியைக் காட்டுகிறது. **– ஜோர்ஜ் ஸ்ரைனர்**

என்ன காரணத்தினால் இப்படி மனித மனத்தில் விஷம் நிறைகிறது? ஏன் அதை பரஸ்பரம் உமிழ்வதில் ஆனந்தம் கொள்கிறோம்? எதற்கு இந்த இம்சை? யாருக்கும் தெரியவில்லை. **– பின்தொடரும் நிழலின் குரல்**

சிந்திக்கிற கருத்துக்கள் மனிதர்களைப் பிளவுபடுத்தி வேற்றுமையை உண்டாக்குமாயின் சிந்தனை இல்லாதிருப்பதே மேல் என்று தோன்றுகின்றது. **– ஜெயகாந்தன்**

வரலாற்றை விட்டு நாம் எங்கே தப்பிச் செல்ல முடியும்? நிலத்தையும், நீரையும் நம்மால் எப்படி ஒதுக்க முடியும்? நேயம் இல்லாமல் எப்படி வாழ முடியும்? **– ஞானி**

நாம் இந்த உலகில் எங்கே நிற்கிறோம் என்பது அல்ல – எந்தத் திசையில் நகர்கிறோம் என்பதுதான் முக்கியம்.

**– ஒலிவர் ஹோம்ஸ்**

நம்முடைய மிகப்பெரிய பெருமை நாம் கீழே விழாதிருப்பதில் அல்ல, ஒவ்வொருமுறை விழும்பொழுதும் மீண்டும் எழுந்திருப்பதில்தான். **– கன்ஃபூசியஸ்**

தியாக உணர்வு, தோழமை, நாட்டுப்பற்று, போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் முன்னணியில் இருக்கும் குணநலம், மேன்மையுடன் வழிநடத்திச் செல்லும் முன்னுதாரணத் தலைமைப் பண்பு ஆகியவற்றை ஒரு கட்சி உறுப்பினா கொண்டிருக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் அந்தப் புதிய கட்சி உறுப்பினர், புதிய உண்மைகளை தனது எலும்பின் குருத்து வரை உணர்ந்திருக்கும் ஒரு மனிதனாயும் இருக்க வேண்டும். சாதாரண மக்களுக்கு ஒரு தியாகமாகத் தெரிவது, அவனுக்கு இயல்பான ஒன்றாக தினசரி நடைமுறையாகத் தெரிய வேண்டும்.

**– சே குவேரா**

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
## G.C.E. (O/L) Examination model Paper

**கர்நாடக சங்கீதம்**

ஆசிரியர் : K.மலர்விழி

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. காதால் கேட்டு இன்பம் பெறக்கூடிய கலை
1) நடனம் 2) சிற்பம் 3) சங்கீதம் 4) ஓவியம்

2. சுருதியில் குறைந்த ஸ்வரங்கள்
1) தீவிர ஸ்வரங்கள் 2) கோமள ஸ்வரங்கள்
3) விக்குருதி ஸ்வரங்கள் 4) பிரக்ருதி ஸ்வரங்கள்

3. பண்டைத் தமிழிசையில் சுத்தமேளம் என அழைக்கப்படும் இராகம்
1) கல்யாணி 2) ஆரபி
3) மாகாமாளவகௌளை 4) ஹரிகாம்போதி

4. அப்பியாச வரிசைகளுள் மாணவர் முதன்முதல் சாகித்தியமாகக் கற்கும் உருப்படி
1) கீதம் 2) கீர்த்தனை 3) இராகமாலிகை 4) பதம்

5. ஸட்ஜம், சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதி மத்திமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலி நிஹாதம் ஆகிய ஸ்வரஸ்தானங்களை எடுத்துக் கொள்ளும் இராகம்.
1) கல்யாணி 2) மோகனம் 3) பந்துவராளி 4) சங்கராபரணம்

6. பியந்தைக் காந்தாரம் என்னும் பண்ணின் இராகம்
1) நவரோஜ் 2) கம்பீரநாட்டை 3) மோகனம் 4) மத்தியமாவதி

7. மெட்டுக்கள் உள்ள வாத்தியம், தாளத்துந்திகள் உள்ள வாத்தியம், நெளிபோட்டு வாசிக்கப்படும் வாத்தியம் மேற்கூறிய சிறப்பம்சங்களைக் கொண்ட வாத்தியம்.
1) தவில் 2) வயலின் 3) தம்புரா 4) வீணை

8. 16 அட்சரங்களை எடுத்துக்கொள்ளும் தாளம்
1) கண்டஜாதி அடதாளம் 2) சங்கீர்ணஜாதி துருவதாளம்
3) மிஸ்ரஜாதி மட்டியதாளம் 4) சங்கீர்ணஜாதி ரூபகதாளம்

9. எல்லா ஸ்வரங்களும் கோமள ஸ்வரங்களாக வரும் இராகம்.
1) கல்யாணி 2) தோடி
3) ஆரபி 4) மோகனம்

10. சங்கீத பிதாமகர் என அழைக்கப்படும். வாக்கேயகாரர்
1) முத்துஸ்வாமி தீட்சிதர் 2) புரந்தரதாஸர்
3) பாபநாசம் சிவம் 4) தியாகராஜ சுவாமிகள்

11. அக்னி - கோ என அழைக்கப்படும் இராகம்
1) சக்கரவாகம் 2) கல்யாணி
3) மாயாமாளவகௌளை 4) மோகனம்

12. காபாலி என்னும் சௌக்ககாலக் கீர்த்தனை அமைந்துள்ள இராகம்
1) கல்யாணி 2) பிலஹரி
3) ஹம்ஸத்வனி 4) மோகனம்

13. விவாதி தோஷமற்ற மேள இராகங்களின் எண்ணிக்கை
1) 28 2) 52 3) 40 4) 32

14. பாஹாங்கமாக அமைந்த இராகம்
1) பிலஹரி 2) ஆரபி 3) பிலஹரி 4) மோகனம்

15. "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா" என்ற உருப்படி
1) வர்ணம் 2) பதம் 3) இராகமாலிகை 4) கீதம்

16. இராஜவாத்தியம் எனச் சிறப்புப் பெயர் பெறும் வாத்தியம்
1) வீணை 2) வயலின் 3) புல்லாங்குழல் 4) தம்புரா

17. நாட்டுப் பாடல்கள் பாடப்படும் இராகம்
1) மோகனம் 2) பந்துவராளி 3) புன்னாகவராளி 4) ஹம்ஸத்வனி

18. பின்வரும் ஸ்வரங்களில் விவாதி ஸ்வரமானது
1) ஸட்ஜம் 2) சதுஸ்ருதி ரிஷபம்
3) ஷட்சுருதி ரிஷபம் 4) சாதாரண காந்தாரம்

19. "அன்பேதான்" என்னும் கீதத்தை இயற்றியவர்
1) பொன் ஸ்ரீவாமதேவன் 2) வேங்கடமகி
3) பரிமளரங்கர் 4) திலகநாயகம் போல்

20. பரிவார சுருதிகள் ஒலிக்கும் வாத்தியம்
1) வீணை 2) வயலின்
3) புல்லாங்குழல் 4) நாதஸ்வரம்

**கீழே தரப்பட்டுள்ள ஸ்வரக் கோர்வையை அடிப்படையாகக் கொண்டு 21 - 23 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

ஸரிகமபாமக / ஸ்நீத / பமகரி //
ஸரிரிககமமப / மபதநி / ஸ்ரிஸா /

21. இந்த ஸ்வரப் பிரயோகத்தில் இடம்பெறும் ஜண்டைப் பிரயோகம்
1) ஸரிரிககமமப 2) பமகரி 3) ஸ்நீத 4) மபதநி

22. மேலே தரப்பட்டுள்ள ஸ்வரக் கோர்வையில் ஒரு ஆவர்த்தனம் எடுத்துக்கொள்ளும் மொத்த அட்சரங்கள்
1) 10 2) 20 3) 16 4) 32

23. மேலே தரப்பட்டுள்ள ஸ்வரக் கோர்வையிலுள்ள குறில் ஸ்வரங்களின் எண்ணிக்கை
1) 24 2) 26 3) 28 4) 30

24. "கஞ்சதளாயதாக்ஷி" என்னும் கமலமனோகரி இராகக் கிருதியை இயற்றிய வாக்கேயகாரர்
1) அருணாசலக் கவிராயர் 2) சியாமா சாஸ்திரிகள்
3) முத்துத்தாண்டவர் 4) முத்துஸ்வாமி தீட்ஷிதர்

25. தாளம் தொடங்குமுன் பாட்டு ஆரம்பித்தல்
1) கிரகம் 2) சமஎடுப்பு 3) அதீதஎடுப்பு 4) அநாகத எடுப்பு

26. // இவ் அடையாளம் குறிப்பிடுவது
1) அன்னியஸ்வரக் குறியீடு 2) ஆவர்த்தன முடிவு
3) அங்கமுடிவு 4) இவை மூன்றும் அல்ல

27. வயலின் வாத்தியத்தை கர்நாடக இசை உலகிற்கு அறிமுகம் செய்தவர்
1) லால்குடி ஜெயராமன்
2) தியாகராஜ சுவாமிகள்
3) பாலஸ்வாமி தீட்சிதர்
4) முத்துத்தாண்டவர்

28. ப்ரஹ்மசக்கரத்தில் வரும் ரிஷபமும் காந்தாரமும்
1) சுத்தரிஷபம் சாதாரண காந்தாரம்
2) சுத்தரிஷபம் சுத்த காந்தாரம்
3) சதுஸ்ருதி ரிஷபம் சாதாரணகாந்தாரம்
4) சுத்தரிஷபம் அந்தரகாந்தாரம்

29. தாது ஆடுவதற்கு மாது அபிநயம் பிடிப்பதற்குமான உருப்படி வகை
1) வர்ணம் 2) ஜதீஸ்வரம் 3) தில்லானா 4) பதம்

30. திரியாங்கங்களையும் கொண்டதாளம்
1) ஏகதாளம் 2) ரூபகதாளம்
3) திரிபுடைதாளம் 4) ஜம்பைதாளம்

31. துரித லயம் குறிப்பது
1) 1ஆம் காலம் 2) 2ஆம் காலம்
3) 3ஆம் காலம் 4) 4ஆம் காலம்

32. தேவாரப் பதிகங்கள் பாடப்பட்ட காலப்பகுதி
1) சோழர்காலம் 2) பல்லவகாலம்
3) சங்ககாலம் 4) 20 ஆம் நூற்றாண்டு

33. மிருதங்கத்தில் வலந்தலையில் உள்ள கடுமையான பகுதி
1) மீட்டுத்தோல் 2) கொட்டு
3) வார் 4) மார்ச்சனை

34. சங்கீத சுதாகரம் என்னும் நூலை எழுதியவர்
1) ஹரிபாலர் 2) வேங்கடமகி
3) தாளப்பாக்கம் சின்னையா 4) பரிமளரங்க

35. அப்பியாச வரிசைகள் பாடப்படும் இராகம்
1) மோகனம் 2) கல்யாணி
3) பிலஹரி 4) மாயாமாளவகௌளை

36. A தாளத்தின் உட்பிரிவு லயம் ஆகும்.
B ஒரு அட்சரத்திற்கு 5 எண்ணிக்கையைக் கொண்டது கண்ட நடை ஆகும்.
C ஏழுமலைமேல் எனும் கீதம் கண்ட நடையாகும்.
D கண்டநடையின் ஜதி தக தகிட என்பதாகும்.
மேற்கூறிய கூற்றுக்களுள் சரியானவை.
1) ACD 2) BCA 3) ABD 4) CBD

37. "கபாலி" என்னும் மோகன இராக உருப்படி
1) கீர்த்தனை 2) பதம்
3) இராகமாலிகை 4) சௌக்ககாலக் கீர்த்தனை

38. சீர்காழி மூவர் எனச் சிறப்புப் பெயர் பெற்றவர்களில் ஒருவர்
1) புரந்தரதாசர் 2) தாண்டவர்
3) திருஞானசம்பந்தர் 4) தியாகராஜர்

39. திஸ்ரஜாதியையும் சதுஸ்ரஜாதியையும் கூட்டினால் வரும் ஜாதி
1) கண்டஜாதி 2) மிஸ்ரஜாதி
3) சங்கீதஜாதி 4) திஸ்ரஜாதி

40. பாடசாலைக் கலைத்திட்டத்தில் அழகியல் கல்வி புகுத்தப்பட்ட ஆண்டு
1) 1971 2) 1972
3) 1973 4) 1978

## பகுதி II

**முதல் வினாவிற்கும் ஏனைய வினாக்களுள் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் 5 வினாக்களுக்கு விடை தருக.**

1. ஆயிரக்கணக்கான கீதங்களை இயற்றி வெயிகீத என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற வாக்கேயகாரர் யார்?

2. ஸ்வரஜதி - சம்போமஹாதேவ
வர்ணம் - அன்னமே
சௌக்ககாலக்கிருதி - கபாலி
மத்திமகாலக் கீர்த்தனை - தேவதேவ

மேற்குறிப்பிட்ட உருப்படிகள் அமைந்துள்ள இராகத்தினைத் தருக.

3. சங்கீர்ணசாபு தளத்தின் ஜதியை எழுதுக.

4. பண்ணிசையில் பழம் பஞ்சரம் என அழைக்கப்படும் இராகம் யாது?

5. சந்தத்துடன் அமைந்த உருப்படி யாது?

6. மும்மூர்த்திகள் என அழைக்கப்படுபவர்கள் யாவர்?

7. ஸரிகா ஸாரிகா மா மா மேற்குறிப்பிட்டுள்ள வரிகள் அப்பியாச வரிசைகளில் எவ் வகையைச் சேர்ந்தது?

8. நீர் பார்த்து இரசித்த இசை நிகழ்ச்சியின் தனித்துவமான அம்சங்கள் இரண்டு தருக.

9. 72 மேளகர்த்தா சக்கரத்தில் 55 - 60 வரையான இராகங்கள் இடம்பெறும் சக்கரத்தின் பெயரைக் குறிப்பிடுக.

10. பல இராகங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட உருப்படியின் பெயரைத் தருக.

02) மங்கள வாத்தியத்திற்குப் பக்கவாத்தியமாக வாசிக்கப்படும் தாள வாத்தியத்தின் பெயரைத் தருக.
1. அவ் வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
2. அவ் வாத்தியத்தின் அமைப்பினை விளக்கி இவ் வாத்தியம் வாசிப்பதில் தேர்ச்சி பெற்ற கலைஞர் இருவரின் பெயர்களைத் தருக.

03) பின்வரும் இராகங்களில் ஒரு இராகத்திற்கு விரிவான இலட்சணம் தருக.
1. மங்களம் பாட உகந்த இராகம்
2. பண் சாதாரி என அழைக்கப்படும் இராகம்
3. ஆரபி

04) 1. "பூலோக கைலாசகிரி சிதம்பரம்" என்னும் பாடலை முதல் முதலாக இயற்றிய வாக்கேயகாரர் பெயர் யாது?
2. இவ் வாக்கேயகாரர் இயற்றிய மேலும் 3 உருப்படிகளைத் தருக.
3. தமிழிசை வளர்ச்சியில் அவரின் பங்களிப்பு பற்றித் தருக.

05) நீர் பார்த்து இரசித்த இசைக் கச்சேரி பற்றி பின்வரும் அம்சங்களின் அடிப்படையில் விமர்சனக் கட்டுரை எழுதுக.
அ) இசைக் கச்சேரியின் தரம், தன்மை.
ஆ) பக்க வாத்தியங்களின் பங்களிப்பு
இ) பாடப்பட்ட உருப்படிகள்
ஈ) நீர் விரும்பி இரசித்த விசேட அம்சம்
உ) குறை, நிறை

06)
1. 72 மேளகர்த்தா சக்கரத்தில் ஐந்தாவது சக்கரத்தில் இடம்பெறும் மேள எண்களையும், இராகங்களையும் குறிப்பிடுக.
2. அவ் இராகங்களின் ஸ்வரஸ்தானங்களை எழுதுக.

07) பின்வரும் உருப்படி வகைகளுள் ஒரு உருப்படியின் இலட்சணத்தை விரிவாக எழுதுக. (அமைப்பு, இயற்றியவர் பெயர், உதாரணம் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)
1) வர்ணம் 2) பதம் 3) இராகமாலிகை

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
## G.C.E. (O/L) Examination model Paper


**விஞ்ஞானம்** | 34 | T | I. |

ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (B.sc)

1) முன்சிறு குடலில் உணவுக்கு காரத்தன்மையை வழங்குவது
1) இரைப்பைச்சாறு 2) பித்தச்சாறு
3) சதையச்சாறு 4) குடற்சாறு


2) ஒரே கூட்டத்தைச் சேர்ந்த விலங்குகள்
1) வௌவால், திமிங்கிலம், மனிதன்
2) மரவட்டை, நத்தை, இறால்
3) மண்புழு, லீச்சட்டை, சாரைப்பாம்பு
4) சிலந்தி, பல்லி, ஈ

3) திறந்தவெளியில் வளரும் தாவரத்தின் மீது விழும் ஒளியின் செறிவுக்கு ஏற்ப ஒளித்தொகுப்பு, சுவாச வீதம் மாறுபடும் விதத்தை பின்வரும் வரைபு காட்டுகின்றது. வரைபுக்கு அமைய நீங்கள் வரும் முடிவு.
1) ஒளியின் செறிவு அதிகரிக்கும் போது சுவாசவீதமும் அதிகரிக்கின்றது.
2) ஒளியின் செறிவு அதிகரிக்கும்போது ஒளித்தொகுப்பு வீதம் தொடர்ச்சியாக அதிகரிக்கும்.
3) ஒளியின் செறிவு அதிகரிக்கும்போது ஒளித்தொகுப்பு வீதம் அதிகரித்து பின் குறிப்பிட்ட பெறுமானத்தின் பின் மாறிலியாகும்.
4) எந்தவொரு ஒளிச்செறிவிற்கும் சுவாச வீதமும் ஒளித்தொகுப்பு வீதமும் சமனாகும்




4) மனிதக் காதிலுள்ள செவிச்சிற்றென்புகளின் தொழில்
1) உடலை சமநிலையில் வைத்திருத்தல்
2) நடுச்செவியின் அமுக்கத்தை புறசெவியின் அமுக்கத்துடன் சீராக்கல்
3) நரம்பு அந்தங்களைத் தூண்டுதல்
4) அதிர்ச்சியை விருத்தி செய்து உட்செவியை நோக்கி ஊடுகடத்தல்

5) பின்வரும் கூற்றுக்களுள் இலிங்க இனப்பெருக்கம் தொடர்பான பிழையான கூற்று
1) சேய் அங்கி தாய் அங்கியிலிருந்து வேறுபட்டுக் காணப்படும்
2) ஒடுங்கல் பிரிவு, இழையுருப் பிரிவு ஆகிய இரண்டும் நடைபெறும்
3) சேய் அங்கி தாய் அங்கியை ஒத்துக் காணப்படும்.
4) ஆண்புணரி பெண்புணரியுடன் இணையும்





மலத்தில் காணப்பட்ட தாவரம் B இன் வித்துக்கள் மூலம் கிளையின் மீது புதிய தாவரங்கள் தோன்றி அதற்குத் தேவையான உணவைப் பெற்றுக்கொள்ள அதன் வேர் உரியம் வரை வளரும்

தாவரமும் A யும் அதன் மீது வளரும் தாவரம் B பற்றியும் மேலுள்ள உரு விளக்குகின்றது மேலே கூறப்பட்ட தொடர்புகளில் சரியாக பெயரிடப்பட்டுள்ள தொடர்பு


| உரிய அங்கிகள் | உணவுத் தொடர்பு |
|---|---|
| பறவை, தாவரம் B | ஒட்டுண்ணி |
| தாவரம் A. தாரம் B | ஒட்டுண்ணி |
| பறவை, தாவரம் A | ஒரட்டிலுண்ணல் |
| தாவரம் A, தாவரம் B | ஒன்றியவாழிகள் |

7) குருதி பாய்ந்தோடும் சரியான ஒழுங்கு
1) மயிர்த்துளைக்குழாய், நாடி, நாளம், இதயம்
2) மயிர்த்துளைக் குழாய், இதயம், நாளம், நாடி
3) இதயம், நாடி, நாளம், மயிர்த்துளைக்குழாய்
4) இதயம், நாடி, மயிர்த்துளைக்குழாய், நாளம்


8) படத்தில் உள்ள உரு கடலில் உள்ள உணவு வலையைக் காட்டுகின்றது. சூடமீனின் போசனை மட்டத்தின் உயிர்த்திணிவு
1) சமன் மீன் போசனை மட்டத்தின் திணிவை விட அதிகமாகும்.
2) தாவரபிளந்தன் போசனை மட்டத்தின் உயிர்த்திணிவை விட அதிகமாகும்.
3) சீல் மீன் போசனை மட்டத்தின் உயிர்த்திணிவை விட மிகக் குறைவாகும்.
4) சுறா போசனை மட்டத்தில் உயிர்த் திணிவைவிட மிகக்குறைவாகும்.




9) படத்தில் காட்டப்பட்டுள்ளது
1) வேர்த்தண்டு கிழங்கு
2) குமிழம்
3) தண்டுக்கிழங்கு
4) முகிழ்





10)



படத்தில் பூவில் தன்மகரந்தச் சேர்க்கையைத் தவிர்த்து அயன் மகரந்தச் சேர்க்கையை மேற் கொள்வதற்கு கொண்டுள்ள இசைவாக்கம்
1) இருகால முதிர்ச்சி
2) வெவ்வேறு மட்டங்களில் அமைந்த ஆணகம் பெண்ணகம்
3) தன்மலட்டுத்தன்மை
4) வெளிப்புறம் திரும்பிய மகரந்தக்கூறு

11) கீழே சில விலங்குகள் கொண்டுள்ள இயல்புகள் தரப்பட்டுள்ளன.
a - இதயத்தில் நான்கு அறைகொண்ட இதயம் காணப்படுதல்.
b - தோலில் உரோமங்கள் காணப்படுதல்.
c - ஓர்சீர்திட உடல் வெப்பநிலையைக் கொண்டிருத்தல்.
d - புறச்செவிச்சோணை காணப்படுதல்.
இவற்றுள் முலையூட்டிகள் மாத்திரம் கொண்ட இயல்புகள்
1) a, b 2) a,b,c 3) b,d மட்டும் 4) c,d மட்டும்


12) மனிதனின் சிறுநீர்ப்பையின் சுவரில் காணப்படும் கலம்
1) 2) 3) 4)



13) யாதேனும் பதார்த்தத்தின் அணு தொடர்பான கூற்றுக்களில் எப்பொழுதும் உண்மையானது
1) எல்லா அணுக்களும் சர்வசமமானவை
2) சில அணுக்களின் கருவில் உள்ள புரோத்தன் எண்ணிக்கை மாறுபடும்
3) எப்பொழுதும் ஒரேயளவான நியூத்திரன் எண்ணிக்கை அணுவின் கருவில் காணப்படும்.
4) எப்பொழுதும் ஒரேயளவான புரோத்தன் எண்ணிக்கை அணுவின் கருவில் காணப்படும்.

14) பொப் என்னும் சத்தத்துடன் தகனமடையும் வாயுவை வெளியேற்றும் சந்தர்ப்பம்
1) பொற்றாசியம் பரமங்கனேற்றை வெப்பமேறும் போது
2) ஐதரசன் வொட்சைட்டு பிரிகையடையும் போது
3) மக்னீசியம் ஐதரோக்குளோரிக்கமிலத்துடன் தாக்கமடையும் போது
4) கல்சியம் காபனேற்று ஐதான ஐதரோகுளோரிக் அமிலத்துடன் தாக்கமடையும்போது

15) உலோக கரண்டியின் மீது செம்பை படியச் செய்வதற்கு பொருத்தமான மாதிரியமைப்பு பின்வருவனவற்றுள் எது?
1) 2) 3) 4)




16) நுரைதீயணை கருவியைப் பயன்படுத்தி தீயணைக்கும் விதம்பற்றி மாணவன் ஒருவன் முன்வைத்த கூற்றுக்கள் மூன்று கீழே தரப்பட்டுள்ளது.
a - வளிக்கும் எரியும் பொருளுக்குமான தொடர்பை நீக்கும்
b - தகனத்துணையிலினால் எரியும் பொருள் மூடப்படும்
c - எரியும் பொருளின் வெப்பநிலையை எரிபற்று நிலையைவிடக் குறைக்கும் இவற்றில் சரியானவை.
1) a,c மட்டும் 2) a, b மட்டும்
3) a மட்டும் 4) b, c மட்டும்

17) கீழே நான்கு சோடியமைரொட்சைட்டுக் கரைசல்கள் தரப்பட்டுள்ளன. (சோடியமைரொட்சைடின் சார் அணுத் திணிவு 40 ($1dm^3 = 1\ l$)
a - 2 $moldm^{-3}$ 500ml b- 2 $mold^{-3}$ 250 ml
c- 1 $moldm^{-3}$ 1000ml d - 1 $mold^{-3}$ 750 ml
இவற்றில் சோடியமைதரொட்சைட்டின் சமமான திணிவைக் கொண்டது எவை?
1) a, d மட்டும் 2) c, d மட்டும்
3) a, c மட்டும் 4) b, c மட்டும்

18) செறிந்த சல்பூரிக்கமிலத்தின் வெளிற்றும் இயல்பை விளக்குவது பின்வருவனவற்றுள் எது?
1) ஏனைய அமிலங்களை விட அடர்த்தி அதிகமாகும்.
2) நீரை கவரும் ஆற்றல் அதிகமாகும்.
3) காபோவைதரேற்றின் மீது விடும் போது காபன் மாத்திரம் மிகுதியாக விடப்படும்.
4) தூய அமிலம் மின்னைக் கடத்தாது.

19) சீமெந்து உற்பத்திச் செயன்முறையின் பிரதான படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.
a - கிளிங்கரைப் பெற்றுக் கொள்ளுதல்
b - சுண்ணாம்பு, களியை 1: 3 விகிதத்தில் கலத்தல்.
c - ஜிப்சத்துடன் சேர்த்து தூளாக்குதல்
d - கலவையை சூளையில் இட்டு சூடாக்குதல்.
சீமெந்து உற்பத்தியின் படிமுறைகளை ஒழுங்குபடுத்தும்போது கிடைப்பது
1) a,b, c, d 2) b,d,c,a 3) b,c,d,a 4) a,c,b,d

20) கரைசலொன்றின் குறித்த கனவளவை அளப்பதற்குப் பயன்படும் பொருத்தமான உபகரணம்
1) அளக்கும் உருளை 2) அளவி
3) முகவை 4) கூம்புக்குடுவை


21) சோடியம், குளிர்நீருடன் தாக்கமடையும்போது கிடைக்கும் அவதானம் அல்லாதது
1) வெப்பம் வெளியேறுதல்
2) ஐதரசன் வாயு வெளியேறுதல்
3) சோடியம் ஐதரொட்சைட்டு உருவாகும்.
4) சோடியத்துண்டு நீரின் மீது எழுந்தமாறான அசைவைக் காட்டுதல்

22) நடுநிலைத் தாக்கத்தைக் காட்டும் இரசாயனச் சமன்பாடு
1) $H_2SO_{4(aq)} + 2NaOH_{(aq)} \rightarrow Na_2SO_{4(aq)} + H_2O_{(l)}$
2) $CaCO_{3(s)} \rightarrow CaO_{(s)} + CO_{2(g)}$
3) $Mg_{(s)} + O_{2(s)} \rightarrow MgO_{(s)}$
4) $Pb(NO_3)_{2(aq)} + 2NaCl_{(aq)} \rightarrow 2NaNO_{3(aq)} + PbCl_{2(aq)}$

23) கடல் நீரில் உள்ள உருக்கில் ஏற்படும் துருப்பிடித்தலைக் குறைப்பதற்கு உருக்கினால் செய்யப்பட்ட கப்பல்களில் உருக்குடன் வேறொரு உலோகத்தையும் தொடர்புபடுத்துவர். இதற்குப் பொருத்தமான உலோகம்.
1) cu 2) Su 3) mg 4) pb


24) எல்லா மூலத்தினதும் பொதுவான இயல்பு
1) இவை அல்லுலோக ஒக்சைட்டுக்களாகும்
2) நீரில் கரைக்கும்போது $OH^-$ அயன்களை உருவாக்கும்.
3) நீரில் கரைக்கும் போது $H^+$ அயன்களை உருவாக்கும்.
4) அரிப்புக்குள்ளாகாது.

25) மேசையின் மீது வைக்கப்பட்டுள்ள மரக்குற்றியொன்றின் மீது விசை P ஐ வழங்கி இழுக்கும் போது தொழிற்படும் விசைகளை படம் காட்டுகின்றது. மரக்குற்றி அசைய முற்படும் வேளை உண்மையாகக் காணப்படுவது.





1) P =F 2) P = R 3) F =R 4) P =W

27) தளவாடியில் ஒளிக்கதிரொன்று பட்டுத்தெறிப்படைவதை படம் காட்டுகின்றது.




1) $60^0$ 2) $120^0$
3) $30^0$ 4) $90^0$

28) நெம்புகோலுக்கு எத்தனத்தை வழங்குவதன் மூலம் சுமையை உயர்த்திக் கொள்ள முடியும். இந்நெம்புகோல் தொடர்பான சரியான கூற்று.





1) எத்தனப் புயத்தின் நீளம் சுமைப் புயத்தின் நீளத்தைவிட அதிகமாகும்போது வழங்கப்பட வேண்டிய எத்தனம் குறைவாகும்.
2) சுமைப் புயத்தின் நீளம் எத்தனப் புயத்தின் நீளத்தைவிட அதிகரிக்கும்போது வழங்கப்பட வேண்டிய எத்தனம் குறைவாகும்.
3) சுமைப் புயத்தின் நீளம் எத்தனப் புயத்தின் நீளத்திற்குச் சமனாகும் போது வழங்கப்பட வேண்டிய எத்தனம் குறைவாகும்.
4) வழங்கப்பட வேண்டிய எத்தனத்தின் பருமன் சுமை எத்தனப் புயத்தின் மீது தங்கியிராது?

29) தெறிப்பின் பின்னர் சமாந்தர ஒளிக்கற்றைகளைப் பெறக்கூடிய ஆடி எது?
1) 2) 3) 4)



30) ABC பாதை வழியே A இலிருந்து C வரை சிறுவன் பயணிப்பதற்கு 25 செக்கன் நேரம் எடுத்தது. AC திசையில் சிறுவனின் வேகம்




1) 3ms-1 2) 4ms-1 3) 7ms-1 4) 1ms-1

31) மேற்காவுகை தொடர்பான தோற்றப்பாடு அல்லாதது
1) பகல் காலங்களில் கடலிலிருந்து தரையை நோக்கி தரைக்காற்று வீசுதல்.
2) சூரியனில் இருந்து புவிக்கு வெப்பம் கடத்தப்படுதல்.
3) சிமினி அல்லாத மண்ணெய் விளக்கின் சுவாலை சீராகக் காணப்படாது
4) மரத்தின் கீழாக தீ மூட்டும்போது மரத்தின் இலைகள் அசையும்.

32) வீட்டு மின்சுற்றுடன் இணைக்கப்பட்டுள்ள மின்னழுத்தியின் வெப்பச்சுருள் மின்னழுத்தியின் உலோக உறையுடன் தொட்டுக்கொண்டிருக்கும்போது மின்னழுத்தியை செயற்படுத்தினால்
1) மின்னழுத்தி தொடர்புபடுத்தப்பட்டு சுற்றில் உள்ள உருகி உருகும்
2) தடக்கு ஆளி செயற்படும்.
3) மின்மனியின் தட்டு வேகமாகச் சுழலும்.
4) மின்னழுத்தியின் வெப்பச்சுருள் எரிந்துவிடும்.

33) பொருளொன்றின் வெப்பக் கொள்ளளவு $100\ j^0c^{-1}$ எனின் இதனை 20 c இலிருந்து 30 c வரை அதிகரிப்பதற்குத் தேவையான வெப்பத்தின் அளவு
1) 100 x 20 J 2) 100 x 30 J
3) 100 x 10 J 4) 100 x 50 J

34) சூழல் சமனிலை குழம்புவதற்கு காரணமான மனிதச் செயற்பாடு
1) நுளம்புகளை அழித்தல்
2) சேதனப் பசளைகளை பயன்படுத்தல்
3) பாம்புகளைக் கொல்லுதல்
4) சூரிய அடுப்புகளைப் பாவித்தல்

35) நுணுக்குப்பன்னியில் ஒலியலையானது மின்னாக மாற்றப்படுதல்
1) மட்டிசைத்தல் 2) பரிபாடையாக்கம்
3) ஊடுகடத்தல் 4) மட்டிசைப்பழித்தல்

இவ் வினாத்தாளுக்கான விடைகள் கல்விமுரசில் எதிர்வரும் சனிக்கிழமை (24.11.2012) வெளிவரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# ஸ்பெக்ட்ரம் ஏலத்தில் முறைகேடு

## புதுப் புரளி கிளப்பும் ஜோஷி

(கொல்கத்தா)

2 ஜி ஸ்பெக்ட்ரம் மறு ஏலம் விடடதில் முறைகேடு நடந்துள்ளது. மத்திய கணக்கு தணிக்கை அதிகாரியின் மதிப்பீடு தவறானது என பிரசாரம் செய்வதற்காக, இந்த முறைகேடு அரங்கேற்றப் பட்டுள்ளது என பா.ஜ. மூத்த தலைவர் முரளி மனோகர் ஜோஷி கூறினார். பா.ஜ. மூத்த தலைவரும் நாடாளுமன்ற பொதுக் கணக்கு குழு தலைவருமான முரளி மனோகர் ஜோஷி இது தொடர்பாக தெரிவிக்கையில்,


உத்தரவை அடுத்து, "2ஜி" ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டுக்கு, சமீபத்தில் மறு ஏலம் விடப்பட்டது. மறு ஏலத்தின் மூலம், 40 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு வருவாய கிடைக்கவில்லை.

இந்த ஏலத்தில் முறைகேடு நடந்துள்ளது. முக்கியமான தொலைத்தொடர்பு நிறுவனங்கள், இந்த ஏலத்தில் பங்கேற்கவில்லை. இதற்கு பின்னணி உள்ளது. ஏற்கனவே நடந்த "2ஜி" ஸ்பெக்ட்ரம் ஏலத்தில் 1.76 இலட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக, மத்திய கணக்கு தணிக்கை அதிகாரி தெரிவித்திருந்தார்.



அவரின் மதிப்பீடு தவறானது என மக்களிடம் பிரசாரம் செய்வதற்காக மறு ஏலத்தில் முறைகேடு அரங்கேற்றப்பட்டு உள்ளது. இதுகுறித்து, முறையான விசாரணை நடத்த வேண்டும். மத்திய கணக்கு தணிக்கை அதிகாரியின் மதிப்பீடு தவறானது என காங்கிரஸ் கட்சியினர் தற்போது பிரசாரம் செய்து வருவதை கவனிக்க வேண்டும்.

மத்திய கணக்கு தணிக்கை அதிகாரியை விமர்சிக்க யாருக்கும் உரிமை இல்லை. அவரின் மதிப்பீடு தவறு என கருதினால், நாடாளுமன்றில் அவருக்கு எதிராக கண்டன தீர்மானம் கொண்டு வர வேண்டுமே தவிர, அவரை விமர்சிக்க கூடாது என அவர் தெரிவித்தார்.




# டெங்கு காய்ச்சல் மருந்து இந்தியாவில் பரிசோதிக்கப்படுகிறது

(பெங்களூர்)

உலகம் முழுவதும் டெங்கு காய்ச்சல் கடுமையாக பரவி வருகிறது. தற்போது இந்தியாவில் பல மாநிலங்களில் இந்த நோய் தாக்கி பலர் உயிரிழந்துள்ளனர். டெங்கு நுளம்புகளால் பரவும் இந்த நோயைக் குணப்படுத்த இன்னும் மருந்து கண்டுபிடிக்கப் படவில்லை. நோய் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தற்போது பிரான்ஸ் தலைநகர் பாரிசில் உள்ள பிரெஞ்ச் பார்மா ஜயன்ட் சனோபி என்ற நிறுவனம் டெங்கு காய்ச்சலை குணப்படுத்த மருந்து கண்டுபிடித்துள்ளது. அதற்கு சி.ஒய்.டி.-டி.டி.வி என பெயரிடப்பட்டுள்ளது.

அந்த மருந்து தாய்லாந்தில் உள்ள 4 முதல் 11 வயது வரையிலான 4002 பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கி பரிசோதிக்கப் பட்டது. அவர்களில் 60 முதல் 90 சதவீதம் பேருக்கு டெங்கு காய்ச்சல் குணமானது. தற்போது இந்தியாவில் டெங்கு காய்ச்சல் தீவிரமாக பரவி வருகிறது எனவே அந்த மருந்தை அங்கு பரிசோதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கு முன்னதாக வயது வந்தோர் 120 பேருக்கு மட்டும் செலுத்தி பரிசோதிக்கப்பட்டது. குழந்தைகளுக்கு வழங்கப்படவில்லை. அதன் முடிவு அடுத்த வருடம் வெளியிடப்படவுள்ளது.


தற்போது இந்த மருந்து மெக்சிகோ, கொலம்பியா, ஹோண்டுராஸ், பியர்டோ ரிசோ, பிரேசில், பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய 10 நாடுகளில் 31 ஆயிரம் பேரிடம் பரிசோதிக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்து வருகிற 2015 ஆம் ஆண்டு உலகம் முழுவதும் விற்பனைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை பிரான்ஸ் மருந்துக் கம்பெனியின் தலைமை அதிகாரி கிறிஸ்டோபர் விபாசர் தெரிவித்துள்ளார்.

இந்தியச் செய்திகள்

# "நான் நினைத்தால் ஆட்சி கவிழும்"

## முன்னாள் எடியூரப்பா சூளுரை



(பெங்களூர்)

நானும் என் ஆதரவாளர்களும் நினைத்தால் பா.ஜ. ஆட்சி கவிழும் என்னை சீண்டுவதை விடுத்து சட்டசபையை கலைத்து விட்டு தேர்தலை சந்திக்கலாம் என முன்னாள் கர்நாடக முதல்வர் எடியூரப்பா சவால் விடுத்துள்ளார்.

கர்நாடக மாநிலம் காவேரியில் அடுத்த மாதம், 10 ஆம் திகதி முன்னாள் முதல்வர் எடியூரப்பா நடத்தும் பொதுக்கூட்டத்தில் பா.ஜ. அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏ. க்கள் கலந்து கொண்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாநில பா.ஜ. தலைவர் ஈஸ்வரப்பா எச்சரித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்து, முன்னாள் முதல்வர் எடியூரப்பா ஆவேசத்துடன் கூறியதாவது,

என் ஆதரவால் தான், கர்நாடக பா.ஜ. ஆட்சி நடக்கிறது. இது உலகிற்கே தெரியும். இதில் மூடி மறைப்பதற்கு எதுவுமிலலை. எனக்கு ஆதரவான, 50 இற்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ. க்கள் பா.ஜ. அரசில் உள்ளனர்.

பா.ஜ. அரசுக்கு அளித்து வரும் ஆதரவை நாங்கள் விலக்கி கொண்டால் ஆட்சியின் கதி என்னவாகும் என்பதை ஈஸ்வரப்பா எண்ணிப் பார்க்க வேண்டும். அவரது பேச்சால் கர்நாடக பா.ஜ. அரசுக்கு ஆபத்து ஏற்படும் என தெரிகிறது.

பா.ஜ. ஆட்சிக்கு ஆபத்து வரும் வகையில் நடந்து கொள்ள வேண்டாம் பேசவேண்டாம் என்று நேரடியாகவும், மறைமுகமாகவும் கூறியும் மீண்டும் மீண்டும் என்னை ஈஸ்வரப்பா சீண்டிக் கொண்டுள்ளார். இதையெல்லாம் விடுத்து சட்டசபையை கலைத்து விட்டு ஈஸ்வரப்பா தலைமையில் தேர்தலை சந்திக்கட்டும் அதுதான் சரியான வழிமுறையாக இருக்கும்.

காவேரியில் நடக்கும் புதிய கட்சி ஆரம்ப விழாவுக்கு, நான்கு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடுவர். கர்நாடக அரசியல் வரலாற்றிலேயே ஒரு புதிய கட்சி ஆரம்பத்தில் இவ்வளவு மக்கள் சேருவது இதுதான் முதல முறையாக இருக்கும். என்ன நடவடிக்கை எடுத்தாலும் பரவாயில்லை. ஹாவேரி பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதாக என் ஆதரவாளர்கள் கூறியுள்ளனர். இவ்வாறு எடியூரப்பா தெரிவித்தார்.

# நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இந்திய கம்யூனிட்டு ஆதரிக்கும்


(புதுடில்லி)

நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரும்போது மத்திய அரசை காப்பாற்றுவது எங்கள் பொறுப்பு அல்ல. நாங்கள் வெளிநடப்பு செய்யமாட்டோம். அரசுக்கு எதிராக (நம்பிக்கை இல்லா தீர்மானத்துக்கு ஆதரவாக) வாக்கு அளிப்போம் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் குருதாஸ் தாஸ்குப்தா கூறி உள்ளார்.


கொல்கத்தாவில் நேற்று நிருபர்கள் அவரிடம், மத்திய அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் திரிணாமூல் காங்கிரஸ் கொண்டு வர இருக்கும் நம்பிக்கை இல்லா தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஆதரிக்குமா? என்று கேட்டதற்கு அவர் மேற்கண்டவாறு பதில் அளித்தார்.

நம்பிக்கை இல்லா தீர்மானத்தை நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்வதற்கு முதலில் 50 எம்.பி.க்களின் ஆதரவை அந்த கட்சி பெற வேண்டும் என்றும் அப்போது குருதாஸ் தாஸ்குப்தா கூறினார்.

# தூக்கத்தில் நடக்கும் நடிகை



நடிகை சமீரா ரெட்டிக்கு தூக்கத்தில் நடக்கிற வியாதியாம். இதற்கு சிகிச்சை பெறுவதற்காக சுவிட்சர்லாந்து செல்ல இருக்கிறார். கவுதமின், வாரணம் ஆயிரம் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர் நடிகை சமீரா ரெட்டி. தொடர்ந்து நடுநிசி நாய்கள், வெடி, வேட்டை படங்களில் நடித்தார். ஆனால் அதன் பிறகு அவருக்கு பட வாய்ப்புகள் எதுவும் இல்லை. இதனால் மீண்டும் இந்திக்கே போய் விட்டார். இந்நிலையில் சமீராவுக்கு சிறு வயதில் இருந்தே சோம்னாம் புலிசமாம்! அதாவது தூக்கத்தில் நடக்கும் வியாதி இருப்பதாகவும், அவர் பல சிகிச்சைகள் மேற்கொண்டும் எந்த பலனும் கிடைக்கவில்லையென்றும் கூறப்படுகிறது.



சிவசேனா கட்சித் தலைவர் பால் தாக்கரேயின் இறுதி ஊர்வலம் மும்பையில் நடைபெற்றது. இதில் இலட்சக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்றதால் மும்பை நகர் ஸ்தம்பிதமடைந்தது.

முரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பெயர்: ப. பவித்திரன்
முகவரி: காந்தி வீதி
கொக்குவில்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

அகவை 10 இல்

# இரகசிய வாக்கெடுப்பில் அமெரிக்காவுக்கு கூடுதல் வாக்கு

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு புதிதாக 18 புதிய உறுப்பு நாடுகளைத் தெரிவு செய்வதற்கு நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் 131 வாக்குகளைப் பெற்று அமெரிக்கா தெரிவாகியுள்ளதுடன் அதிகப்படியான வாக்குகளையும் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்த இரகசிய வாக்கெடுப்பு நியூயோர்க்கில் உள்ள ஐ.நா பொதுச்சபையில் நடைபெற்றது. அமெரிக்காவைத் தவிர ஜேர்மனி, அயர்லாந்து, ஆர்ஜென்ரீனா, பிறேசில், ஐவரிகோஸ்ட், எஸ்தோனியா, எதியோப்பியா, காபோன், ஜப்பான், கசகிஸ்தான்,கென்யா,மொன்ரனிக்ரோ, பாகிஸ்தான், தென்கொரியா, சியராலியோன், ஐக்கிய அரசு எமிரேட்ஸ், வெனிசுவேலா ஆகிய நாடுகளும் பேரவைக்குத் தெரிவாகியுள்ளன.

இலங்கைக்கு நெருங்கிய நாடுகளான சீனா, ரஷ்யா, கியூபா ஆகிய நாடுகள் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்காது. அமெரிக்காவுக்கு அடுத்த படியாக ஜேர்மனி 127 வாக்களையும், அயர்லாந்து 124 வாக்குகளையும் பெற்றுள்ளன.

## உலகச் செய்திகள்

# இஸ்ரேல் தாக்குதலில் 23 பலஸ்தீனியர்கள் பலி

(காசா)




பல வருடங்களாக அமைதியாக இருந்த பலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சினை தற்போது தீவிர சண்டையாக மாறியிருக்கிறது. நேற்று முன்தினம் இஸ்ரேலின் விமானப்படை பலஸ்தீனத்தின் காசா நகரின் மீது கடுமையான தாக்குதல் நடத்தியது. இதில் 9 குழந்தைகள் உட்பட பொதுமக்கள் 23 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த நான்கு நாட்களாக நடந்து வரும் தாக்குதலில் இதுவரை 69 பேர் இறந்துள்ளனர். இந்த மோசமான தாக்குதல் குறித்து விவாதிக்க அராப் லீக் உச்சி மாநாட்டை கூட்ட பலஸ்தீன நிர்வாகம் கோரியுள்ளது.

இஸ்ரேலின் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள அராப் லீக், போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கத் தவறிய ஐநாவின் பாதுகாப்பு சபைக்கு தனது முழுமையான அதிருப்தியை தெரிவித்துள்ளது.

# ஜப்பான் நாடாளுமன்ற தேர்தல் எதிர்க்கட்சிக்கு வெற்றி வாய்ப்பு



(டோக்கியோ)


ஜப்பான் பிரதமர் யோஷிஹிகோ நோடா கடந்த சில தினங்களுக்கு முன்பு நாடாளுமன்ற கீழ்சபையை கலைத்தார். இதனை அடுத்து நாடாளுமன்றத்தேர்தல் டிசம்பர் 16ஆம் திகதி நடைபெறுகிறது. இந்த தேர்தலில் எந்தக் கட்சிக்கு மக்களின் ஆதரவு இருககிறது? என்பதை கண்டறிய பிரபல பத்திரிகையொன்று கருத்து கணிப்பு நடத்தியது.

இதில் எதிர்க்கட்சியான லிபரல் டெமாக்ரடிக் கட்சிக்கு 26 சதவீத ஆதரவும், ஆளும் ஜப்பான் ஜனநாயக கட்சிக்கு 13 சதவீத ஆதரவும் இருப்பது தெரியவந்தது. இருப்பினும், 43 சதவீதம் பேர் தங்கள் ஆதரவு எந்தக் கட்சிக்கு என்பதை தெரிவிக்க மறுத்து விட்டார்கள்.

# புதிய பால் மண்டலம் விண்வெளியில் கண்டுபிடிப்பு

(நியூயோர்க்)

விண்வெளியில் மிக தொலைவில் புதிய பால் மண்டலத்தை நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதற்கு மாக்சோ 647-ஜெ.டி. என பெயரிட்டுள்ளனர். விண்வெளி தோன்றி 42 கோடி ஆண்டுகளுக்கு பின் இந்த புதிய பால் வெளி மண்டலம் தோன்றியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.



இது பூமியில் இருந்து 1330 கோடி ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது. இதன் அகலம் 600 ஒளி ஆண்டுகள் தொலைவுக்கும் குறைவாக இருப்பதால் மிகசிறிய பால் மண்டலம் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

சூரியன், பூமி உள்ளிட்ட கோள்கள் அமைந்துள்ள பால்வெளி மண்டலம் 1 இலட்சத்து 20 ஆயிரம் ஒளி ஆண்டுகள் தொலைவு அகலமானது. நாசாவின் ஹப்பிள் மற்றும் ஸ்பிட்சர் தொலை நோக்கிகள் மற்றும் அறிவியல் இதழான நேச்சர் அமைத்துள்ள தொலைநோக்கியை ஒருங்கிணைத்து மேற்கொண்ட ஆய்வில் இந்த புதிய பால் வெளி மண்டலத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

# அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தாய்லாந்துக்கு சுற்றுப்பயணம்



(பாங்கொங்)

தேர்தலுக்கு பிறகு முதல் வெளிநாட்டு சுற்றுப்பயணமாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா நேற்று தாய்லாந்து சென்றுள்ளார்.

தாய்லாந்து, மியான்மர், கம்போடியா ஆகிய 3 ஆசிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா திட்டமிட்டுள்ளார். ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிட்டு வெற்றி பெற்ற பிறகு அவர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு சுற்றுப்பயணம் இதுவாகும்.

தாய்லாந்து நாட்டில் பாங்கொங் நகர விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டது.

அங்கு அவர் நீண்டகாலமாக உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் தாய்லாந்து மன்னர் பூமிபால் அதுல்யாதேஜை சந்தித்தார்.

இதனை அடுத்து ஒபாமா நேற்று மியான்மர் சென்றார். அங்கு அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் சுற்றுப்பயணம் செய்வது இதுவே முதல் முறையாகும். ஜனாதிபதி தெயின் சென், எதிர்க்கட்சி தலைவர் ஆங்சான் சூகி ஆகியோரைச் சந்தித்து ஒபாமா முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினர்.

இராணுவ ஆட்சி நடைபெறும மியான்மருக்கு ஒபாமா வருகை புரிவதற்கு பல்வேறு சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றன. இந்த இரு நாட்டு சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு அவர் கம்போடியா சென்று அங்கு நடைபெறும் கிழக்கு ஆசிய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கிறார்.

# யசீர் அரபாத்தின் உடலை தோண்டி எடுக்கும் பணி ஆரம்பம்

(ரமல்லா)



பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத், 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் மருத்துவ மனையில் சந்தேகத்திற்கிடமான முறையில் மரணமடைந்தார். அவர் விஷம் வைத்து கொல்லப்பட்டிருக்கலாம் என்று வதந்தி பரவியது. இதனை உறுதி செய்யும் விதமாக, சில மாதங்களுக்கு முன்னர் அர்பாத் அணிந்திருந்த உடைகளை ஆய்வு செய்த சுவிட்சர்லாந்து ஆய்வகம், அவரது உடையில் கடுமையான போலோனியம்-210 என்ற "ஐசோடோப்" கண்டறியப்பட்டதாக கூறியது.

இதனைத் தொடர்ந்து அரபாத்தின் உடலில் இந்த நச்சுத்தன்மை செலுத்தப்பட்டுள்ளதா? என்று சோதனை நடத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ரஷ்யாவைச் சேர்ந்த நிபுணர்கள் நியமிக்கப்பட்டனர். ரமல்லா நகரின் மேற்கு கரையில் உள்ள அரபாத்தின் இல்லத்தில் உள்ள கல்லறை நேற்று தொடக்கம் உடைக்கப்படுகின்றது.

கொங்கிரீட்டினால் கட்டப்பட்ட இந்தக் கல்லறையை முழுமையாக உடைத்து, அரபாத்தின் உடலை வெளியே எடுக்கும் பணி 2 வாரத்தில் முடிவடையும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அரபாத்தின் கல்லறை இடிக்கப்படும் தகவல் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. அவரது உடலைத் தோண்டி எடுப்பது தெரியவந்தால், ஆதரவாளர்கள் உணர்ச்சிவசப்பட்டு அசம்பாவிதங்களில் ஈடுபடக்கூடும் என விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# விமானத்தில் திடீர் தீ

பாகிஸ்தான் விமானத்தில் திடீரென தீ ஏற்பட்டதை தொடர்ந்து, விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

பாகிஸ்தான் கராச்சி ஜின்னா விமான நிலையத்தில் இருந்து லண்டன் செல்ல விமானம் புறப்பட்டதும், விமானத்தின் வால் பகுதியில் தீ பற்றி எரிந்தது.

இதனையடுத்து விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டு, தீ அணைக்கப்பட்டது. அதிர்ஷ்டவசமாக பயணிகள் அனைவரும் உயிர் தப்பினர்.

# பங்களாதேஷில் சிகரெட் நெருப்பால் 500 குடிசைகள் சாம்பல்; 17பேர் பலி




(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிற்கு அருகே உள்ள சாண்டி நகரின் குடிசைப்பகுதியில் தீவிபத்து ஏற்பட்டது. கூலித்தொழிலாளர்கள், ரிக்ஷா இழுப்பவர்கள் என அதிகமானோர் வசிக்கும் இங்கு நேற்றுக் காலை திடீரென தீப்பிடித்து 500இற்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து சாம்பாலாயின. இதில் 5 பெண்கள், 4 குழந்தைகள் என 11 பேர் இந்த தீயில் எரிந்து சாம்பாலாயினர்.

தீவிபத்திற்கு சிகரெட் நெருப்பு காரணமாக இருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணை நடந்து வருகிறது. பெரும்பாலானோர் வீடுகளை இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர்.

# முஸ்லிம்களின் மீள்குடியமர்வு வடக்கில் நடக்கும்



(கொழும்பு)

வடக்கிலிருந்து புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் விரைவில் மீள்குடியேற்றப்படுவார்கள் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

22 ஆண்டுகளுக்கு முன்னர் ஆயிரக் கணக்கான தமிழ் பேசும் முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறு விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்கள் அவர்களின் சொந்த இடங்களில் உடனடியாக மீள்குடியேற்றப்படுவர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டு 22 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போது அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

## ஆஸி.சென்ற அகதிகள் திருப்பி அனுப்பப்படுகின்றனர்

அவுஸ்ரேலியாவுக்குச் செல்லும் இலங்கை அகதிகளின், அகதி அந்தஸ்து விண்ணப்பங்களை, அவுஸ்ரேலியாவிற்கு வெளியே உள்ள தீவுகளில் பரிசீலிப்பது என கன்பராவில் மேற்கொண்ட சட்ட மாற்றத்தை அடுத்து இலங்கைக்கு திருப்பி அனுப்புபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதன் அடிப்படையில், நேற்று முன்தினம் வரை 332 அகதிகள், அவர்களது விருப்பத்திற்கு மாறாக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலியக் குடிவரவுத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

நவுறு தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த எட்டு பேரின் அகதி அந்தஸ்துக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் மாலை அவர்கள் கொழும்பை வந்தடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அகதி அந்தஸ்து விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ள நிலையில், தாயகம் திரும்ப விரும்புபவர்களுக்கு உடனடியாக அதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என அவுஸ்ரேலியக் குடிவரவுத் தரப்பின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது தவிர, நாடு திரும்ப விருப்பம் தெரிவிக்கும் அகதிகளுக்கு நிதி உதவி தேவைப்படின், அதற்கான விண்ணப்பத்தினை சுவிஸ்லாந்தைத் தளமாகக் கொண்டுள்ள சர்வதேச குடியேறும் அமைப்புடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### நாடாளுமன்ற....

அரசியல் குற்றப் பிரேரணையை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு பெயரிடப்பட்டுள்ளது.

குறித்த குற்றப் பிரேரணையை விசாரணை செய்வதற்கு நாடாளுமன்ற தெரிவுக் குழுவிற்கு இடைக்கால தடைவிதிக்கப்பட வேண்டும் எனவும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

குறித்த மனு மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சிறிஸ் கந்தராஜா உள்ளிட்ட மூன்று நீதியரசர் குழுவால் ஏற்கப்பட்டு அது இன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வேலணையில் உள்ளூராட்சி வாரம் இறுதிநாள் நிகழ்வு இன்று

(வேலணை)

வேலணை பிரதேச சபையினது உள்ளூராட்சி வார இறுதி நாள் விழா இன்று காலை 9.30 மணியளவில் வேலணை பிரதேச வளாகத்தில் அமைந்துள்ள தேவா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

வேலணை பிரதேசசபையின் தவிசாளர் சி.சிவராசா (போல்) தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில், பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பர.ஜெயகரன், சிறப்பு விருந்தினர்களாக வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன், தீவக கல்வி வலய பணிப்பாளர் ஐ.யோன் குயின்ரஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

விழாவில், வேலணைப் பிரதேச சபையின் வேலணை உப அலுவலகப் பொறுப்பதிகாரி க.பாலசுப்பிரமணியம் உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் தொடர்பாக உரையாற்றவுள்ளார்.

பிரதேசசபையின் செயலாளர் செ.ரமேஷ் இவ்விழாவின் நோக்கம் பற்றிய கருத்துரையினை வழங்கவுள்ளார்.

இன்றைய விழாவில் சிறந்த வாசகர்களைக் கௌரவித்தல், சிறந்த மாணவர்களைக் கௌரவித்துப் பாராட்டுதல் போன்ற நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (05)

## சுழற்சி முறை மின்வெட்டு யாழ்.குடாவில் தொடரும்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் பல பகுதிகளில் இன்று தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை இடைக்கிடை மின்சார விநியோகத்தடை அமுல்படுத்தப்படவுள்ளது.

மின்விநியோக மார்க்கங்களுக்கு இடையூறாகவுள்ள மரங்கள், மரக்கொப்புக்கள், தென்னம் ஓலைகள், பனை ஓலைகள் என்பவற்றை வெட்டியகற்றி தடையற்ற மின்சார விநியோகத்தை மேற்கொள்ளும் நோக்கிலேயே இந்தத் தடை அமுல் படுத்தப்படவுள்ளது.

இதன்படி, இன்றும், நாளையும், நாளை மறுதினம் 23 ஆம் திகதியும் காலை 08.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் அளவெட்டி, மல்லாகம் ஒரு பகுதி, பன்னாலை, வித்தகபுரம், சிறுவிளான், விளான், அம்பனை, கோண்டாவில், இருபாலை வீதிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

இன்று காலை 08.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் கரந்தன், ஊரெழு, நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, சாமியன் அரசடி பிரதேசம், சம்மந்தர் கடைப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்சார விநியோகத் தடை அமுலாகவுள்ளது.

அதேவேளை, நாளை மறுதினம் காலை 08.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் மந்திகை, கிராமக்கோடு, தம்பசிட்டி, ஓராம் கட்டை சந்தி, சாரையடி, புலோலி, பருத்தித்துறை நகரப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### அரசியல் தீர்வில்...

கூறியமை, அவர்களின் இரட்டைத் தன்மை நிலைப்பாட்டைக் காட்டுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ. சுமந்திரன் அரசியல் சாசனத்தின் 13ஆவது திருத்தம் அர்த்தமற்றது என்றும் அதனால் ஆரம்பம் முதலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை நிராகரித்தது என்ற கருத்தை நாடாளுமன்றத்தில் வெளியிட்டிருந்தார். சுமந்திரனின் இந்தக் கருத்து ஊடகங்களில் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

நாம் 13 ஆவது திருத்தத்தை ஆரம்பம் முதலே அர்த்தமற்றதென்று நிராகரித்திருக்கிறோம் என்று சுமந்திரன் தெரிவித்த கருத்து தொடர்பாக தமது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்திய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன, இது விடயத்தில் சுமந்திரன் இரட்டைத் தன்மை நிலைப்பாட்டை கொண்டிருக்கிறார் என்று தெரிவித்துள்ளார்.

இது பற்றி சஜின்வாஸ் குணவர்தன, தாம் சுமந்திரனின் கருத்துக் குறித்து நாடாளுமன்றத்தில் தனது நிலைப்பாட்டைக் கடந்த 17 ஆம் திகதியன்று அறிவிக்கப் போவதாக கூறியிருந்தார். எனினும் நவம்பர் 17 ஆம் திகதியன்று சுமந்திரன் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்திருந்த போதிலும், அவர் நாடாளுமன்ற சபைக்குள் பிரவேசிக்காமல் சஜின்வாஸ் குணவர்தனவை நேருக்கு நேர் சந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்புடைய வகையில் ஐக்கியமாக சுமூக தீர்வொன்றைக் காண்பதில் அக்கறை கொண்டிருக்கவில்லை என்று கூறிய சஜின்வாஸ் குணவர்தன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல தரப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான கருத்துக்களை அவ்வப்போது வெளியிட்டு வருகிறார்கள் என்றும் கண்டனம் தெரிவித்தார்.

சுமந்திரன் ஒரு கருத்தை கூறும் போது அவரது கட்சித்தலைவர் ஆர்.சம்பந்தன் இன்னுமொரு கருத்தை தெரிவிக்கிறார். தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் ஓர் உண்மையான ஐக்கியம் ஏற்படும் வரை வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வைக் காண்பது கஷ்டமாக இருக்கு மென்றும் சஜின்வாஸ் குணவர்தன மேலும் சுட்டிக்காட்டினார்.

ஒரு தடவை சுமந்திரன் 13 ஆவது திருத்தம் அர்த்தமற்றதாக இருப்பதனால் அதனை சட்டப்புத்தகத்தில் இருந்து நீக்கிவிட வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தார்.

13 ஆவது சட்டத்திருத்தம் இலங்கையின் சட்டப் புத்தகத்தில் இணைத்திருப்பது அநாவசியமான செயல் என்று அவர் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதிக்கு...

யேற்பின் மூன்றாவது ஆண்டு பூர்த்தி மற்றும் அவரது பிறந்த நாளை முன்னிட்டு யாழ். செயலகத்தால் இந்த விசேட பூசை வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்று நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பமாகிய இந்த விசேட பூசை வழிபாட்டில் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா, வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் பிரதேச செயலர்கள், வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், உத்தியோகத்தர்கள், கடற்படை மற்றும் இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த விசேட பூசை வழிபாடுகளை கீரிமலை நகுலேஸ்வர குமாரசாமிக் குருக்கள் நிகழ்த்த அவரது தந்தையாகிய நகுலேஸ்வரக் குருக்கள் ஜனாதிபதி கீரிமலை நகுலேஸ்வரத்திற்கு முன்னர் விஜயம் செய்ததனையும் நினைவுபடுத்தி சிற்றுரையாற்றினார்.

தொடர்ந்து ஜனாதிபதியின் பிறந்த நாளை முன்னிட்டு பிரசாதம் குளிர்பானம் வழங்கப்பட்டதுடன், கீரிமலை சிவபூமி மடத்தில் இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

(பா)

## வலுவடையும் வர்த்தக உறவு; நியூசிலாந்து அமைச்சர் கொழும்புக்கு

(கொழும்பு)

இலங்கைக்கும், நியூசிலாந்துக்கும் இடையில் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறை சார்ந்த உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன் ஒரு கட்டமாக உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நியூஸிலாந்தின் கைத்தொழில் அமைச்சர் டேவிட் கார்ட்டர் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கைக்கும் நியூஸிலாந்துக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் விவசாய உறவுகளை மேம்படுத்தும் முகமாகவே அவரது விஜயம் அமையவுள்ளது.

கார்ட்டரின் இலங்கை விஜயத்திற்கான நிகழ்ச்சி நிரலில் வர்த்தகம் மற்றும் விவசாய வாய்ப்புக்களும் முதன்மை பெறும் என வர்த்தக அமைச்சின் ஊடக அறிக்கை தெரிவித்துள்ளது.

### அமைச்சர்களின்....

பகிர்வு யோசனையை அர்த்தமுள்ளதாக மாற்றலாம் என இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார். உள்நாட்டு வெளிநாட்டுக் கடன் தொகை அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர், நாடு பாரியளவு கடன் சுமையில் உழல்வது இரகசியமான விடயமல்ல என சுட்டிக்காட்டியுள்ளார். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு உரியளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எனினும், அரசாங்கம் பாரியளவிலான அமைச்சரவைக்கு பெருந்தொகைப் பணத்தை செலவிடுவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். அதிகாரப் பகிர்வு தீர்வினை வழங்க அரசாங்கம் மெய்யாக விரும்பினால் மாகாணசபை அமைச்சுக்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். பொருளாதார ரீதியாக நெருக்கடிகளை எதிர் நோக்கி வரும் தருணத்தில் 60 அமைச்சர்களினதும், 36 பிரதி அமைச்சர்களினதும் சேவை அவசியமானதா என சம்பந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

### காணாமல்...

அதிகாரி மற்றும் நீதவான் முன்னிலையில் குறித்த எலும்புக்கூடு மற்றும் அதனுடன் காணப்பட்ட காலணி மற்றும் ரீசேட், சாரம் என்பன மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் காணாமல் போனவரது உறவினர்களும் ஸ்தலத்திற்கு வந்து குறித்த எலும்புக்கூடு சந்திரகுமாரினது என்பதனை தடயங்களை வைத்து அடையாளம் காட்டிதையடுத்து நேற்றுப் பிற்பகல் எலும்புக்கூடு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக யாழ் போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

### மாநகர....

ராக நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக உறுதியளித்திருந்த நிலையில் மீண்டும் யாழ். மாநகர சபையின் ஆணையாளராக பிரணவநாதன் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.(02)

# புறக்கோட்டை பொலிஸ் அதிகாரி கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்

(கொழும்பு)

இலஞ்சம் பெற முயற்சித்த கொழும்பு புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி அலுத்கெதர டிகிரி பண்டார விஜேரத்ன கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவருடன் அதே பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜண்டான உபுல் வசந்த குமார என்பவரும் இதன்போது கைதாகியுள்ளார்.

குறித்த அதிகாரி கிருலப்பனை பிரதேசவாசியொருவரிடமிருந்து ஒரு இலட்சம் ரூபாவை இலஞ்சமாகக் கோரியுள்ளார்.

தங்க ஆபரணக் கடையொன்றில் கொள்ளையிடப்பட்ட நகைகளை தன்வசம் வைத்திருந்தமை தொடர்பிலான வழக்கிலிருந்து விடுவிப்பதற்காகவே அப் பொலிஸ் அதிகாரி பணத்தினைக் கேட்டுள்ளார்.

இவருக்கு இலஞ்சம் வழங்க இணங்கிய நபர் ஏற்கனவே இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்புத் திணைக்களத்திற்கு இது தொடர்பில் தகவல் வழங்கியுள்ளார்.

இந்நிலையில் நேற்று அந்நபர பொலிஸ் நிலையத்தில் வைத்து இலஞ்சத் தொகையை வழங்கிய போது அங்கு வந்த திணைக்கள அதிகாரிகள் பொறுப்பதிகாரியையும் சார்ஜண்டையும் கையும் களவுமாகப் பிடித்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## தேசத்திற்கு நிழல்தரு மரநடுகை



ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு மக்கள் செறிந்து வாழும் பகுதியாகிய நெடுந்தீவு பிரதேச சபையின் அருகாமையில் பிரதேச சபை தவிசாளர் தானியேல் றெக்சியன் தலைமையில் மரநடுகை நடைபெற்றது.

இதில் நெடுந்தீவு பிரதேச செயலர் ஆழ்வார்பிள்ளை சிறி மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், ஊழியர்கள், நெடுந்தீவு நிர்வாக ஒருங்கிணைப்பு குழுவினர், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இராஜதந்திர உறவு ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை மற்றும் சுரிநோம் ஆகிய நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சு நேற்று தெரிவித்தது.

இது தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பாலித கோஹன்ன மற்றும் ஐக்கிய நாடுகளுக்கான சுரிநோமின் நிரந்த வதிவிடப் பிரதிநிதி ஹென்றி ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இதன் ஊடாக அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு மற்றும் ஒத்துழைப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. அத்துடன் இரு நாடுகளின் பொது இலக்குகளை ஐக்கிய நாடுகளில் பகிர்ந்து கொள்ளவுள்ளது.

எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையில் உயர் மட்ட விஜயங்களை மேற்கொள்ள இரு தூதுவர்களும் இணங்கியுள்ளனர்.

## சீனப் பெண்ணிடம் கொள்ளை; பொலிஸ் உத்தியோகத்தர் கைது

(கொழும்பு)

தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் போது தங்கப்பதக்கம் வென்ற ரங்க விமலவன்சவையும் முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சீனப் பெண் ஒருவரிடமிருந்து நான்கு மில்லியன் ரூபா பணத்தை துப்பாக்கி முனையில் கொள்ளையிட்ட சம்பவம் ஒன்றில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட நிலையிலேயே அவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் கடந்த முதலாம் திகதி இடம்பெற்றுள்ளது. கொள்ளுப்பிட்டி கமெரன் பிளேஸில் இடம்பெற்ற இந்தக் கொள்ளையின் போது பயன்படுத்தியதாகக் கூறப்படும் துப்பாக்கி ஒன்றையும் கார் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்களான இருவரையும் எதிர்வரும் 29ஆம் திகதி இடம்பெறவுள்ள அடையாள அணிவகுப்பில் நிறுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## பெண்ணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

கலேவல - தேவஹுவ பிரதேச வீடொன்றில் இருந்து மர்மமான முறையில் மரணமான பெண்ணொருவரின் சடலத்தை பொலிஸார் நேற்றுக் காலை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட பெண்ணுடன் முன்னர் வசித்து வந்த ஆணொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொலை செய்யப்பட்ட பெண்ணுடைய, கணவரின் இளைய சகோதரர் எனத் தெரிய வந்துள்ளது.

கணவர் இறந்த பின்னர் குறித்த பெண் கணவரின் இளைய சகோதரருடன் குறித்த வீட்டில் ஒன்றாக வசித்து வந்துள்ளார்.

சம்பவம் குறித்து கலேவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 8 சந்தேகநபர்கள் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்லத் தயாராக இருந்ததாகக் கூறப்படும் சந்தேக நபர்கள் எட்டுப்பேரை நேற்று முன்தினம் இரவு கைது செய்ததாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிகுடி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலினை தொடர்ந்து களுவாஞ்சிக்குடி பிரதேசத்திலுள்ள வீடொன்றிற்கு சென்ற பொலிஸார் அங்கு மேற்படி நபர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீர்கொழும்பு மற்றும் கல்குடா, ஓந்தாச்சிமடம் போன்ற பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் இவர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## இரத்தினக் கல் கடத்தல் இலங்கையர் கைது

மலவாயிலில் மறைத்து வைத்து இரத்தினக்கல் கடத்திய இலங்கைப் பிரஜை ஒருவர் சென்னை விமான நிலையத்தில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

32 வயதுடைய சபூவன் என்ற நபரே கைதுசெய்யப்பட்டவராவார். விமானத்தில் இருந்து சென்ற குறித்த நபரை சென்னை விமான நிலைய பாதுகாப்பு பிரிவினர் சோதனையிட்டு விசாரித்தனர்.

அதன்போது அவர் மலவாயிலில் வைத்து இரத்தினக்கல் கடத்தியமை தெரியவந்தது. இதனையடுத்து விமான நிலைய பொலிஸார் உடனே குறித்த நபரை கைது செய்தனர்.

மலவாயிலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரத்தினக் கற்களின் பெறுமதி 50 இலட்சம் இந்திய ரூபாய் என கணிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கையர் சவுதியில் மரணம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் பணியாற்றிய இலங்கைத் தமிழர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

ஹட்டன், கெரோலினா தோட்டத்தைச் சேர்ந்த ரங்கசாமி மகாலிங்கம் என்ற 36 வயதான இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் சவுதி அரேபியாவுக்கு தொழில் நிமித்தம் சென்றுள்ளார்.

அவரது உயிரிழப்பிற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. குறித்த சடலம் அடுத்த வாரம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

## நூலக கட்டட திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும்

(ஊர்காவற்றுறை)

அனலைதீவு பொதுநூலக கட்டடத் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை அனலைதீவு பொதுநூலகத்தில் இடம் பெறவுள்ளது.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சமூகமட்ட நிறுவனங்களோடு இணைந்து நூலக அபிவிருத்தி என்ற நோக்கோடு ஊர்காவற்றுறை பிரதேச சபையுடன் இணைந்து கனடா அனலைதீவு கலாசார ஒன்றியத்தினால் மெருகூட்டப்பட்ட அனலைதீவு பொது நூலக கட்டடத் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளது.

அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு ஊர்காவற்றுறை பிரதேச சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## ஜனாதிபதி கசகஸ்தானில்



(அஸ்ரானா)

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கசகஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

மூன்று நாள் பயணமாக நேற்றுக் காலை சிறப்பு விமானத்தில் அவர் கசகஸ்தான் தலைநகர் அஸ்ரானா சென்றுள்ளார்.

கசகஸ்தானில் மூன்று நாட்கள் தங்கியிருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொருளாதாரம் மற்றும் கனிய வளங்கள் தொடர்பில் முக்கிய கலந்துரையாடல்களை அந்நாட்டு தலைவர்களுடன் மேற்கொள்ளவுள்ளார்.

மத்திய ஆசியாவில் அமைந்துள்ள கனிய வளங்கள் மிக்க நாடாக கசகஸ்தானை குறிப்பிடலாம்.

எனவே தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள கனிய வளப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள கசகஸ்தானுடன் புதிய ஒப்பந்தங்களை மேற்கொள்ள வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்பள்ளி மாணவர்கள் மயக்கம் ஏழு பேர் மருத்துவமனையில்

(கொழும்பு)

ஆயித்தமலை 'பாலர் பாடசாலையொன்றின் மாணவர்கள் எழுவர் திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு நேற்று பகல் அரிப்பு, குமட்டல், வாந்தி, தலைச்சுற்று என்பன ஏற்பட்டதால் ஆயித்தமலை கிராம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

முதலில் இரு மாணவர்கள் திடீர் சுகயீனமுற்ற நிலையில் பின்னர் மேலும் ஐவர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் கம்பளை, பலாங்கொடை, கண்டி ஆகிய பகுதி பாடசாலை மாணவர்கள் திடீர் சுகயீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கப்பல் மாலுமிகள் உணவின்றித் தவிப்பு

கொழும்பின் புறநகர் பகுதியான பாணந்துறை கடற்பரப்பில் நங்கூரமிட்டுள்ள மலேசியாவுக்கு சொந்தமான கப்பலில் பணிபுரியும் இலங்கையர்கள் உணவின்றி நிர்க்கதிக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மலேசியாவுக்கு சொந்தமான சாக் சிரிசஸ் என்றழைக்கப்படும் இந்தக் கப்பல் கடந்த நான்கு மாதங்களாக பாணந்துறை கடற்பரப்பில் நங்கூரமிட்டுள்ளது.

இக்கப்பலில் இலங்கையைச் சேர்ந்த ஐந்து பேரும் மியன்மாரைச் சேர்ந்த 10 பேரும் பணிபுரிவதாக தெரிவிக்கப்படுகிறது. நடுக்கடலில் உணவு மற்றும் குடிநீர் வசதியின்றி பெரும் சிரமப்படுவதாக பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த கப்பலுக்கு எதிராக சிங்கப்பூர் நிறுவனமொன்று வழக்குத் தாக்கல் செய்துள்ளமையால் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 நவம்பர் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.